VITHIYA VINOTHINI SERIES.

சிவமயம்.

பதினொன்றாந்திருமுறையின்

ஓர்பகுதியாகிய

நக்கீரதேவர் அருளிச்செய்த

# கயிலைபாதிகாளத்திபாதி திருவந்தாதி

மூலமும்

அதற்கு

வித்யாவிநோதினி பத்ராதிபர்களால்

எழுதுவித்தபதவுரையும்.

இவை

**திரு - சம்பந்தமுதலியாரால்**

சென்னை

**அமெரிக்கன் அச்சுக்கூடத்தில்**

பதிப்பிக்கப்பட்டன.

1892

---

Copy right Reserved.

உ

திருச்சிற்றம்பலம்

நக்கீரதேவநாயனார் அருளிச்செய்த

# கயிலைபாதி காளத்திபாதி

திருவந்தாதி - நேரிசைவெண்பா.

## கயிலை.

1. சொல்லும்பொருளுமே தூத்திரியுநெய்யுமா
நல்லிடிஞ்சிலென்னுடையநாவாகச் - சொல்லரிய
வெண்பாவிளக்காவியன்கயிலைமேலிருந்த
பெண்பாகர்க்கேற்றினேன்பெற்று.

இ - ள். வியன்கயிலைமேல் இருந்த பெண்பாகர்க்கு - பெருமையமைந்த திருக்கயிலாய மலையின்மீதெழுந்தருளியிருக்கிற மங்கைபங்கனாகிய சிவபெருமானுக்கு, சொல்லும் பொருளுமே தூதிரியும்நெய்யும் ஆ பெற்று - பதமும் அர்த்தமுமே பரிசுத்தமாகிய திரிசீலையும் நெய்யுமாகப் பெற்று, என்னுடைய நாவேநல் இடிஞ்சில் ஆக (பெற்று) - எனது நாவே அழகாகிய அகலாகப்பெற்று, சொல் அரிய வெண்பாவே விளக்கு ஆ (பெற்று)-சொல்லுதற்கரிதாகிய வெண்பா அந்தாதியே தீபமாகப்பெற்று, ஏற்றினேன் - கொளுத்தினேன், எ - று.

சொல்லைத்திரியாகவும், சொற்பொருளை நெய்யாகவும், எனது நாவை அகலாகவுங்கொண்டு, வெண்பாவந்தாதியாகிய தீபத்தைப் பெருமையுள்ள திருக்கயிலாய மலையின்மீதெழுந்தளியிருக்கும் சிவபெருமான் சந்நிதியில் ஏற்றினேன் என்பது கருத்து. குற்றமற்ற சொல்லின்றிப்பொருளும், பொருளின்றிச்சொல்லும், திரியின்றிநெய்யும், நெய்யின்றித்திரியும் பயனிலவாதலால், "சொல்லும்பொருளுமே தூத்திரிநெய்யுமா, என்றும், திரி அழுக்கடைந்ததாயின் நெய்யிருந்தும் நன்குவிளங்காதாதலால் "தூத்திரியும்" என்றும், திரிநெய்களுளவாயினும் அகலின்றிப் பயனில ஆதலால், "நல்லிடிஞ்சி லென்னுடைய நாவாக" என்றும், இவைகளொருங்குகூடினும் கொளுத்தாவிடிற் பயனிலையாதலால் "ஏற்றினேன்" என்றும், விளக்கேற்றுதலுள்ளும் நெய்விளக்கேற்றுதல் பெரும்புண்ணியமாதலால், "நெய்யுமா" என்றும், அந்த நெய்விளக்கும் தெய்வநாயகனாகிய சிவபெருமான் சந்நிதியிலேற்றுதல் இம்மை மறுமை வீடுபேறுகளுக் கேதுவாதலால் "வியன்கயிலை மேலிருந்தபெண்பாகர்க்கேகற்றினேன்" என்றும் கூறினார். பெண்பாகர் - உமாதேவியை (இடப்) பாகத்தில் உடையவர்.

### காளத்தி.

2. பெற்றபயனிதுவேயன்றேபிறந்தியான்
கற்றவர்களேத்துஞ்சீர்க்காளத்திக் - கொற்றவற்குத்
தோளாகத்தாடரவஞ்சூழ்ந்தணிந்தவம்மானுக்
காளாகப்பெற்றேனடைந்து.

இ - ள். கற்றவர்கள் ஏத்தும் - (அறிவுநூல்களைக்) கற்றவர்கள் துதிக்கின்ற, சீர்காளத்தி கொற்றவற்கு - சிறப்பையுடைய திருக்காளத்தி வேந்தனாகிய சிவபெருமானுக்கு, தோள் ஆகத்து - திருந்தோள்களிலும் திருமார்பிலும், ஆடு அரவம் - (படமெடுத்து) ஆடுமியல்புள்ள பாம்புகளை, சூழ்ந்து அணிந்த அம்மானுக்கு - ஆராய்ந்தணிந்த எமது தந்தைக்கு, அடைந்து - சரணமடைந்து, ஆள் ஆகப்பெற்றேன் - அடிமையாகப்பெற்றேன், யான் பிறந்துபெற்றபயன் இதுவே அன்றே - நான் (அருமையாகிய இந்தமாநுடப் பிறவி) பிறந்து படைத்தபயன் இதுவேயன்றோ, எ - று.

அறிவுநூல்களைக் கல்லாதவர்கள் ஏத்தாராதலால் கற்றவர்கள் என்றது அறிவுநூல்களைக் கற்றோரை. சூழ்தல் - இன்ன இடத்தில் இதுதரித்தற்குரிய தென்றாராய்தல். அணிதல்-ஆபரணமாகத்தரித்தல். அன்றி அலங்கரித்தல் எனினும்,"ஆளாகப்பெற்றேன்" என்பதற்கு அடிமை யாகபாக்யம் படைத்தேன் எனினும் அமையும். இறைவனுக்காளாத லருமைதோன்ற "ஆளாகப்பெற்றேன்" என்றும்,பிறவிக்குப் பயன் இறைவற் காட்படுதலே யென்பது தோன்ற,"பெற்றபயனிதுவே யன்றே பிறந்தியான்" என்றும் கூறினார். திருக்காளத்தி வேந்தனுக்கு ஆளாகப்பெற்றேன்,நான் பிறந்த தற்குப்பயன் இது வன்றோ என்பது கருத்து.

### கயிலை.

3. அடைந்துய்ம்மினம்மானையும்மாவிதன்னைக்
குடைந்துண்ணவெண்ணியவெங்கூற்றங் - கடைந்
துநுங், கண்ணுளேபார்க்கும்பொழுதுகயிலாயத்
தண்ணலேகண்டீரரண்

இ - ள். (உலகத்திரோ) உம் ஆவிதன்னை - உமது உயிராகிய உள்ளீட்டை (உணவை), குடைந்து உண்ண எண்ணிய - (உடம்பினின்றும்) தோண்டி யெடுத்துண்ணக்கருதிய, வெம்கூற்று - கொடியயமன், அங்கு அடைந்து - அவ்விடத்தினின்றும் வந்தடைய, நும்கண்ணுளே பார்க்கும் பொழுது - (அவனை) உமதுகண்ணினால் காணும்போது, (கண்டுகலங்கும் போது) அரண் - (உம்முயிர்க்காவல்) ஆவான், கயிலாயத்து அண்ணலே -

திருக்கயிலாயத்தி லெழுந்தருளியிருக்கின்ற பெரியோனே, (ஆதலால்) அமானை-அந்தப்பெரியோனை, அடைந்து-சரண்புகுந்து, உய்ம்மின்-பிழையுங்கள், எ - று.

பனங்காயினின்றும் நுங்குக்குடைந்தெடுத் துண்ணுதல்போல, கூற்றுவன் சிறிதும்இரக்கமின்றி உமது உடம்பினின்றும் உயிரைக்குடைந்தெடுத் துண்போனாதலால், "உம்மாவிதன்னைக் குடைந்துண்ணவெண்ணிய வெங்கூற்றம என்றும், இறுதிக்காலத்தில் உயிர்களுக்கு யமதரிசநமுண்டாதல் திண்ணமாதலால் "நுங்கண்ணுளே பார்க்கும்பொழுது" என்றும், அப்போது உயிர்த்துணையாவான் காலகாலனாதல் வேண்டுமாதலால் "கயிலாயத்தண்ணலே கண்டீரரண்" என்றும்,அந்தப்பெரியோனை யடைந்தாலன்றி கூற்றங்கடந்து உய்யீர் என்றற்கு,"அடைந்துய்ம்மின்"என்றும் கூறினார். யமலோகத்தின்கொடுமைமிகுதியால்அகன்பெயரைச் சொல்லவுமஞ்சி அங்கு என்றார். உலகத்தீரே, உம்மிறுதிக்காலத்தில் கூற்றுவனைவென்று உய்யக் கருதுவீராயின், அவனுக்குக்கூற்றுவனாகிய சிவபெருமானை அடையுங்கள் என்பது கருத்து.

## காளத்தி.

4. அரணமொருமூன்றுமாரழலாய்வீழ
முரணம்புகோத்தமுதல்வன் - சரணமே
காணுமாலுற்றவன்றன்காளத்திகைதொழுது
பேணுமாலுள்ளம்பெரிது.

இ - ள். உள்ளம் - (என்) மனமானது, அரணம் ஒரு மூன்றும் - மதில்களோர் மூன்றும், ஆர் அழல் ஆய்வீழ - நிறைந்த நெருப்பு மயமாயெரிந்துவிழ, முரண் அம்பு கோத்தமுதல்வன் - வலிமையுள்ள அஸ்திரத்தைத்தொடுத்த தலைவனாகிய சிவபெருமானது, சரணமே - திருவடிகளையே, பெரிது - மிகுதியும், காணும்மால் உற்று - காணவேண்டுமென்னும் ஆசையைப் பொருந்தி, அவன் தன்காளத்தி - அவனது திருக்காளத்தியை, கைதொழுது பேணும் - அஞ்சலிசெய்து விரும்பாநின்றது, ஆல்-இதென்ன வியப்பு, எ - று.

அரணமொரு மூன்று என்றது திரிபுரங்களை. அவை இரும்பு பொன் வெள்ளி என்பவற்றானியன்ற மும்மதில்களோடு கூடினவை. "சுரும்புறு நீலங் கொய்யற்றமிதின்று துயில்பயின்மோ, வரும்பெறற்றோழியொடாயத்துநாப்பணமரரொன்னா, ரிரும்புறுமாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசையன்றோர், துரும்புறச்செற்ற கொற்றத்தெம்பிரான் றில்லைச் சூழ் பொழிற்கே" என்பது திருக்கோவையார். திருமாலே அம்பாதலால் "முர

ணம்பு'' என்றும், திருமாலை அம்பாகக்கொண்டு செலுத்தவல்லோனென் பது தோன்ற ''முதல்வன்'' என்றும் கூறினர். ''உள்ளம்பெரிது காணுமா லுற்று'' என்பதை மனத்தின் தொழிலாகவும், ''அவன் றன்காளத்தி கைதொழுது'' என்பதைக் காயத்தின்தொழிலாகவும் கொண்டு, ''பேணும்'' என்பதற்குத் துதிக்கும் எனவாக்கின்தொழிலைக் கொள்ளினுமாம். ஆகவே முக்கரணங்களானும் வழிபடாநின்றேன், இது என்னவியப்பு என்பது கருத்து. வியப்பாவது இதற்கு முன்னெல்லாம் பிரபஞ்சவாசனையி லழுந்திக் கிடந்த மனம் இங்ஙனம் இறைவன் விஷயத்தில் மடைமாறப்பட்டதே என்னும் வியப்பு.

### கயிலை.

5. பெரியவர்காணீரொன்னுள்ளத்தின்பெற்றி
தெரிவரியதேவாதிதேவன் - பெரிதுந்
திருத்தக்கோரேத்துந்திருக்கயிலைக்கோனை
யிருத்தத்தான்போந்ததிடம்.

இ - ள். தெரிவு அரிய - (யாவர்க்கும்) தெரிதல் அருமையாகிய, தேவ அதிதேவன் - தேவர்களுக்கு அதிதேவனாகிய, பெரிதும் - மிகுதியும், திருத்தக்கோர் ஏத்தும் - சிவஞானப் பெருஞ்செல்வத்தினையுடையோர் துதிக்கின்ற, திருக்கயிலைக்கோனை - திருக்கயிலைக்கிறைவனை, இருத்தத் தான் - இருத்துதற்கே, இடம்போந்தது - இடம்பெற்றது, (ஆதலால்) பெரியவர் - பெரியோரே, என் உள்ளத்தின்பெற்றி - என்மனத்தின் தன்மையை, காணீர் - பாருங்கள், எ - று.

திருக்கயிலை நாயகனாகிய சிவபெருமான் வீற்றிருத்தற் கிடங்கொடுத்தலன்றி வேறொன்றற்கு மிடங்கொடாத என்மனத்தின் றன்மையைப் பெரியீர் நீங்கள் பாருங்கள் என்பது கருத்து. பெரியவர் - இவ்விடத்து முன்னிலைக்கண் வந்தது. அதிதேவன் - மேலான தேவன். தேவ ஆதிதேவன் எனப்பிரித்து, தேவர்களுக்கு முதற்கடவுள் எனினுமாம். திரு - செல்வம். அது இவ்விடத்துச் சிவஞானமாகிய பெருஞ்செல்வத்தின் மேலது.

### காளத்தி.

6. இடப்பாகநீள்கோட்டிமவான்பயந்த
மடப்பாவைதன்வடிவேயானல் - விடப்பாற்
கருவடிசேர்கண்டத்தெங்காளத்தியாள்வார்க்
கொருவடிவேயன்றுருவுரு.

இ - ள். விடப்பால் - நஞ்சின்பகுதியதாகிய, கருவடிசேர் கண்டத்து - கருமையாகிய அழகுபொருந்திய திருமிடற்றினையுடைய, எம்காளத்தி யாள்வார்க்கு-எமது திருக்காளத்தியாள் வாருக்கு, இடப்பாகம் - இடப்பக்கம், நீள்கோட்டு-நீண்டசிகரங்களையுடைய, இமவான்பயந்த-மலையரையன்பெற்ற, மடப்பாவை தன்வடிவே ஆனால்-இளமைப்பருவமுள்ள பாவைபோலும் உருவத்தையுடையவளாகிய உமாதேவியின் உருவமேயானால்,உரு ஒருவடிவே அன்று-உருவமானது ஒருவடிவினையுடையதன்று, எ - று.

ஆல் - அசை. இமம் - பனி. இமவான் - பனிமலைக்கதிபன். காளத்தி ஆள்வார் - திருக்காளத்தியை ஆள்பவராகிய சிவபெருமான். எமது திருக்காளத்திச் சிவபிரானுக்கு ஒருபாகம் பெண்ணுருவாயிருத்தலால் ஓருருவமன்றென்பது கருத்து.

கயிலை.

7. உருவுபலகொண்டுணர்வரிதாய்நிற்கு
மொருவனொருபாலிருக்கை - மருவினிய
பூக்கையிற்கொண்டெப்பொழுதும்புத்தேளிர்வந்திறைஞ்சு
மாக்கயிலையென்னுமலை.

இ - ள். மருஇனிய-மணத்தினலினிதாகிய, பூ - மலர்களை, புத்தேளிர் - தேவர்கள், கையில் கொண்டு - தம்கையிலேந்தி, எப்பொழுதும் - எக்காலமும், வந்து இறைஞ்சும்-வந்து(அர்ச்சித்து)வணங்குகின்ற,மாகயிலை என்னும் மலை - பெருமை பொருந்திய திருக்கயிலாய மென்னும் மலையானது, உருவுபலகொண்டு - பலவடிவங்களைக்கொண்டு, உணர்வு அரிது ஆய் நிற்கும் - (யாவர்க்கும்) அறிதலருமையாய் நிற்கின்ற, ஒருவன்-ஒப்பற்றவனாகிய சிவபெருமான், ஒருபால் இருக்கை-ஒருபக்கத்தில் வீற்றிருக்கும் இடமாகும், எ - று.

பலவுருவங்கள் கொண்டு ஒருவரும் உணரவொண்ணாது நின்ற சிவபெருமான் ஒருபக்கத்தில் வீற்றிருத்தற்குரிய இடமாகும் திருக்கயிலாய மலை என்பது கருத்து.

காளத்தி.

8. மலைவரல்போல்வானவருந்தானவருமெல்லா
மலைகடல்வாய்நஞ்செழல்கண்டஞ்சி - நிலைதளரக்
கண்டமையாற்றண்சாரற்காளத்தியாள்வார்நஞ்
சுண்டமையாலுண்டிவ்வுலகு.

இ - ள். வானவரும் தானவரும் எல்லாம்-தேவர்களும் அசுரர்களும் ஆகிய எல்லாரும், அலைகடல்வாய் - அலையாநின்ற பாற்கடலின்கண், நஞ்சு-விஷமானது, மலைவரல்போல் எழல்கண்டு - மலைவருதல்போல எழுந்து வருதலைப்பார்த்து, அஞ்சி - பயந்து, நிலைதளரக்கண்டமையால் - தங்கள் நிலையழியக்கண்டதனால், காளத்தி ஆள்வார் - திருக்காளத்தியாள்வாராகிய சிவபெருமான், நஞ்சு - அந்த விஷத்தை, உண்டமையால் - பருகினதனால், இவ்வுலகு உண்டு - இந்தவுலகமானது நிலைபெற்றிராநின்றது, எ - று.

உண்ணாவிடின் இவ்வுலகம் அன்றே அழிந்தொழியு மென்றதாயிற்று. "நஞ்சழல். எனவும்பாடம். இதற்குப்பொருள் விஷாக்நி யென்பது.

கயிலை.

9\. உலகமனைத்தினுக்குமொண்ணுதன்மேலிட்ட
திலகமெனப்பெறினுஞ்சீசீ - யிலகியசீ
ரீசாதிருக்கயிலையெம்பெருமானென்றென்றே
பேசாதிருப்பார்பிறப்பு.

இ - ள். இலகிய சீர் ஈசா-எக்காலத்தும் அழிவின்றி விளங்குகின்ற பெருஞ் சிறப்பையுடைய ஈசனே, திருக்கயிலை எம்பெருமான்- திருக்கயிலாயத்திலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே, என்று என்று-என்று புகழ்ந்துரைத்து, பேசாது இருப்பார்-(மேன்மேலும் அவன் திருவார்த்தையையெடுத்துப்)பேசாதிருப்பவரது, பிறப்பு-ஜந்மமானது, உலகம் அனைத்தினுக்கும்-எல்லாவுலகங்களுக்கும், ஒள் நுதல்மேல் இட்ட-ஒட்பமாகிய நெற்றியிலிட்ட, திலகம் எனப்பெறினும்-பொட்டென்று சொல்லப்பெறினும், சீ சீ-சைசை, எ - று.

ஈசன்-பெருஞ்செல்வன். ஒட்பம் -அழகு. பிறதேவர்களுடைய சிறப்புப்போன்றழிவதன்றாதலால், "இலகியசீர்" என்றும், ஒப்புயர்வில்லாதபெருஞ்செல்வனாதலால் "ஈசன்" என்றும், இத்தகைப்பெருமையுடையானை யாம் காணுமாறென்னையெனத்தளராமைப்பொருட்டுத் "திருக்கயிலையெம்பெருமான்" என்றும், "அவனது திருவார்த்தையையெடுத்துப் பேசாதிருப்பவரது பிறப்புவீணாதலால், "என்றென்று பேசாதிருப்பார் பிறப்பு உலகமனைத்தினுக்கு மொண்ணுதன்மேலிட்ட திலகமெனப்பெறினுஞ் சீசீ" என்றும் கூறினார். சீசீ - பயனிலது என்னும்பொருளுள்ள இகழ்ச்சிக்குறிப்பு. திருவார்த்தை - இறைவனது திருவடியைப்புகழ்ந்து பேசும் பேச்சு. இது "ஈசற்கியாம்வைத்தவன் பிணகன்றவன் வாங்கியவெம்,பாசத்திற்காரென்றவன் றில்லையின் ஞெளிபோன்றவன்றோள், பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன் பூங்கழல்யாம்,பேசத்திருவார்த்தையிற் பெருநீளம் பெருங்கண்களே" என்னுந் திருக்கோவையார் வாயிலானுணர்க. உலகமுழுதுமாளும் ஒப்பற்ற

வராயினும் அவர் இறைவனைத் துதியாராயின் அவர் பிறப்புப் பயனற்ற தென்பது கருத்து.

காளத்தி.

10. பிறப்புடையர்கற்றோர்பெருஞ்செல்வர்மற்றுஞ்
சிறப்புடையராளுனுஞ்சீசீ - யிறப்பில்
கடியார்நறுஞ்சோலைக்காளத்தியாள்வா
ரடியாரைப்பேணாதவர்.

இ - ள். இறப்பு இல் - (என்றும்) அழிதலில்லாத, கடி ஆர் நறு சோலை காளத்தி ஆள்வார் - இன்பம்நிறைந்த நன்மணங்கமழ்கின்ற சோலைகள் சூழ்ந்த திருக்காளத்தியாள்வாரது, அடியாரை - தொண்டர்களை, பேணாதவர் - விரும்பி வழிபடாதவர், பிறப்பு உடையர் (ஆனாலும்) - (உயர்குடியிற்) பிறத்தலையுடையராயினும், கற்றோர் (ஆனாலும்) - (கற்றற்குரியவைகளைக்) கற்றோராயினும், பெருஞ்செல்வர் (ஆனாலும்) பெருஞ்செல்வத்தை யுடையராயினும், மற்றும் சிறப்பு உடையர் ஆனாலும் - மற்றுமுள்ள விசேடங்க ளெல்லாவற்றையும் உடையராயினும், சீசீ - சைசை, எ - று.

இறப்பு இல் என்பதனைக் கடிக்காயினும் சோலைக்காயினும் காளத்தியாள்வார்க்காயினும் விசேடணமாக்குக. சோலைகள் தம்மிடத்து வந்தடைந்தார்க்கு நீழல்கொடுத்து அவர் விடாய்தணித்துக் கனிமுதலிய வுதவி இன்பஞ்செய்தலால், கடி என்பதற்கு இன்பமெனப் பொருள்கூறலாயிற்று. அன்றி விளக்கமெனினும் பொருந்தும். இறைவனைப் பேணுவோராயினும் அவரது அடியாரைப் பேணாதவராயின் அவர் எத்துணைச் சிறப்பினராயிருந்தும் பயனற்றவராதலால், "காளத்தியாள்வாரடியாரைப்பேணாதவர் பிறப்புடையர் கற்றோர் பெருஞ்செல்வர்மற்றுஞ், சிறப்புடையராளுனுஞ் சீசீ" என்றார். மற்றுஞ்சிறப்பு என்றது - பிறப்பு கல்வி செல்வம் என்பவையொழிய நின்ற அடக்கம் அறிவு ஒழுக்கம் ஒப்புரவுமுதலியவற்றை. அடியார் பெருமைக்களவில்லை யென்பது கருத்து.

கயிலை.

11. அவரும்பிறந்தாராய்ப்போவார்கொலாவி
யெவருந்தொழுதேதததுமெந்தை - சிவமன்னு
தேக்குவார்சோலைத்திருக்கயிலையேத்தாதே
போக்குவார்வாளாபொழுது.

இ - ள். எவரும்தொழுது ஏத்தும் எந்தை - யாவரும் வணங்கித் துதிக்கின்ற எமது தந்தையாகிய சிவபிரானது, சிவம்மன்னு - நன்மை நிலைபெற்ற, தேக்குவார் சோலை - தேனொழுகுகின்ற சோலைகள்சூழ்ந்த, திருக்கயிலை - திருக்கயிலாயத்தை, ஏத்தாதே - துதியாமலே, பொழுது - தம்வாழ்நாளை, வாளாபோக்குவார் - வீணாய்க்கழிப்பவராகிய, அவரும் - அவரும், ஆவிபிறந்தார் ஆய்போவார் கொல் - உயிரோடுகூடிப் பிறந்தவர்களாகிச் செல்வரோ, எ - று.

"எவரும் தொழுதேத்தும் எந்தை" என்றதனால் இவனின்மிக்கானொருவன் இல்லையென்பது பெறப்பட்டது. தேக்கு - இனிப்பு. இது இனிப்புள்ள தேனுக்காயிற்று. சிவம்மன்னு தேக்குவார் சோலை என்பதற்கு, மங்களகரமமைந்த கமுகமரங்களோங்கிய சோலையெனினுமாம். எந்தை திருக்கயிலை என இயையும். இறைவனையேத்திப் பொழுதுபோக்காதே வாளா பொழுதுபோக்குவோர் அருமையாகிய மாநுடப்பிறவியின் பயனடையாதவராதலால் "அவரும் பிறந்தாராய்ப்போவார் கொல் ஆவி" என்றார். இதனால் அவர் ஆவியொடுகூடியிருந்தும் பிணத்தை நிகர்ப்பர் என்றவாறாயிற்று. "ஆவியொடு காயமழிந்தாலும்" என்றார் பட்டணத்தடிகளும்.

காளத்தி.

12. வாளாபொழுதுகழிக்கின்றார்மானிடவர்
கேளார்கொலந்தோகிறிபட்டார் - கீளாடை
யண்ணற்கணுக்கராய்க்காளத்தியுண்ணின்ற
கண்ணப்பராவார்கதை.

இ - ள். கீள் ஆடை அண்ணற்கு - கீளாடையையுடைய பெரியோனாகிய சிவபெருமானுக்கு, அணுக்கர் ஆய் - அன்பராகி, காளத்தி உள்நின்ற - திருக்காளத்தியில் நிலைபெற்றிருந்த, கண்ணப்பர் ஆவார்கதை - திருக்கண்ணப்பதேவரது கதையை, வாளா பொழுதுகழிக்கின்றார் - வீணே தமது வாழ்நாளைப் போக்குகின்றவராகிய, மானிடவர் - மாநுடர், கேளார்கொல் - கேட்டிராரோ, (கேளாமையால்தான்) அந்தோ - ஐயோ, கிறிபட்டார் - பொய்யாகிய பிரபஞ்சவாசனையி லகப்பட்டு (வீணே காலங்கழிக்கின்றார்) எ-று.

கேட்டிருப்பராயின் வாளாபொழுதுகழியார் என்றபடி. கீள் ஆடை - கிழித்துரித்ததனால் வந்த ஆடை. (யானைத்தோல்-புலித்தோல்) அன்றி இரு காலினிடையே செல்லப்பாய்ச்சிப்பின்செருகின ஆடை. அன்றிக்கோவண ஆடைஎனினுமாம். கீள்-கிழிக்கப்பட்டசீரை. அன்பரல்லாதார் அணுகுதற்குரியரல்லாதலால்அணுக்கர் என்றது அன்பரையுணர்த்திற்று. நின்ற என்பதற்கு இறைவன்பரிசோதித்த சோதனைகளுக்குப்பின்னிடாதுநின்ற எனினுமாம். கிறி - பொய். கண்ணப்பர் - தம் கண்ணைத்தோண்டிச் சிவலிங்

கப் பெருமானுக்கு அப்பினவர். இதனை, "தொண்டு செய்து நாளாறிற் கண்ணிடந்தப் பவல்லேனல்லன்" என்னும் பட்டணத்தடிகள் திருவாக் கானு முணர்க.

கயிலை.

13. கதையிலேகேளீர்கயிலாயநோக்கிப்
புதையிருட்கண்மாலோடும்போயச் - சிதையாச்சீர்த்
தீர்த்தன்பாற்பாசுபதம்பெற்றுச்செருக்களத்திற்
பார்த்தன்போர்வென்றிலனோபண்டு.

இ - ள். பார்த்தன் - அருச்சுனன், பண்டு - முற்காலத்தில், புதை இருள்கண் - (கண்ணொளி) மறைதற்குரிய இருட்பொழுதில், மாலோடும் கயிலாயம் நோக்கிபோய் - கண்ணனோடு கூடித்திருக்கயிலாயத்தை நோக் கிச்சென்று, சிதையா சீர்தீர்த்தன்பால் - அழியாத சிறப்பினையுடைய பரி சுத்தனாகிய சிவபெருமானிடத்தில், பாசுபதம்பெற்று - பாசுபதம் என்னும் அஸ்திரத்தைப்பெற்று, போர் - போர்த்தொழிலைச்செய்கிற, செருக்களத்தில் - (பாரத) யுத்தகளத்தில், வென்றிலனோ - (துரியோதனாதியரைச்) செயித்தி லனோ, (இதனை) கதையிலே கேளீர் - பாரதகதையில் கேட்பீராக, எ - று.

சிதையா சீர்த்தீர்த்தன் என்றதனாலும், மாலோடும் போய் என்ற தனாலும், பாசுபதம் பெற்றுச்செருக்களத்தில் பார்த்தன்போர்வென்றில னோ என்றதனாலும், அழிவற்றபெருஞ் சிறப்பையுடையவன் சிவபெரு மானே யென்பதும், மால்முதலியோரினும் பேராற்றலுடையானென்பதும், பாசுபதமன்றிப்பிற கணைகளால்பகைவர் அழியாரென்பதும், வெற்றியிற்சிற ந்தது அதுவேயென்பதும் பெறப்பட்டன. தீர்த்தன்-பரிசுத்தன். (அடைந் தாரது உயிர்மாசுபோக்கி உய்விப்பவன்.) பார்த்தன்-பிரதையின் புத்திரன். பாசுபதம் - பசுபதிசம்பந்தமாகிய அஸ்த்ரம்.

காளத்தி.

14. பண்டுதொடங்கியும்பாவித்துநின்கழற்கே
தொண்டுபடுவான்றொடர்வேனைக் - கண்டுகொண்
டாளத்தயாவுண்டோவில்லையோசொல்லாயே
காளத்தியாயுன்கருத்து.

இ - ள். காளத்தியாய் - திருக்காளத்தியையுடையவனே, பண்டு தொடங்கியும் - பூருவகாலந்தொட்டும், பாவித்து - (உன்மங்கள குணங் களைப்) பாவனை பண்ணி, நின்கழற்கே - உன்திருவடிக்கே, தொண்டுபடு வான் தொடர்வேனை - அடிமைப்படும்பொருட்டுத் தொடர்ந்துபற்றுகின்ற வனாகிய என்னை, கண்டுகொண்டு - (இன்னநிலைமையன் என்று உன்முற்ற றிவால்) அறிந்துகொண்டு, ஆள - ஆண்டருள, தயா உண்டோ இல்லை

யோ - கிருபையுண்டோ இல்லையோ, உன் கருத்துசொல்லாய் - (அடியேனுக்கு) உன்திருவுளக்கிடையை நீயே திருவாய்மலர்ந்தருளவேண்டும், எ - று.

"பண்டுதொடங்கியும் பாவித்து நின்கழற்கேதொண்டுபடுவான்றொடர்வேன்" என்றமையால் பழவடியேன் என்பதும், "கண்டுகொண்டு" என்றமையால் இறைவன் முற்றறிவன் என்பதும், "ஆள" என்றமையால், முற்றறிவாற்கண்டுகொண்டபின்னர் ஆள்வதேதகுதியென்பதும், "தயா" என்றமையால் ஆள்வதற்குக்காரணம் பெருங்கருணையே யென்பதும், "உண்டோ இல்லையோ" என்றமையால் இதுகாறும்ஆளாமையால் ஐயமுற்றேன் என்பதும், உன் கருத்துசொல்லாய் என்றமையால், எம்மனோர் கருத்தையறிதற்குரிய முற்றறிவனாகிய உன் கருத்தை நீயே சொல்லினன்றி யாம் அறியவல்லேமல்லேம்என்பதும்பெறப்பட்டன. தயா-தயையெனத்தமிழில்வழங்கும். இது கருணையென்னும் பொருளமைந்தவடசொல். நின்கழற்கே என்றதேற்றேகாரம்-பிறதெய்வங்களை மறந்தும் தொழேன் என்பதை வற்புறுத்தவந்தது, "மைவார்கருங்கண்ணி செங்கரங் கூப்புமறந்துமற்றப், பொய்வானவரிற்புகாது தன்பொற்கழற்கேயடியே, னுய்வான் புகவொளிர்தில்லை நின்றோன் சடைமேலதொத்துச், செவ்வானடைந்த பசுங்கதிர் வெள்ளைச்சிறுபிறைக்கே" என்பது திருக்கோவையார். "மற்றோர் தெய்வங்கனவிலு நினையாது" என்பது திருவாசகம். "விளையார் கொன்றையினாய் விடமுண்டமிடற்றினனே, யுளையார் பல் புகழாயுமை நங்கையோர் பங்குடையாய், திளையார் தெண்கடல் சூழ்திருவான்மியூருறையும், அளையாவுன்னையல்லாலடையா தெனதாதரவே" "இடியாரேறுடையா யிமையோர் தம்மணிமுடியாய், கொடியார் மாமதியோடரவம் மலர்க்கொன்றையினாய், செடியார் மாதவி சூழ்திருவான்மியூருறையும், அடிகேளுன்னை யல்லாலடையா தெனதாதரவே" என்பது தேவாரம்.

## கயிலை.

15\. கருத்துக்குச்சேயையாய்க்காண்டக்கோர்காண
விருத்திதிருக்கயிலையென்றா - லொருத்த
ரறிவானுறுவார்க்கறியுமாறுண்டோ
நெறிவார்சடையாய்நிலை.

இ - ள். நெறிவார் சடையாய் - செவ்வேநீண்ட சடையையுடையவனே, கருத்துக்குச் சேயை ஆய் - மனத்துக்குத்தூரஸ்த்தனாகி, காண்டக்கோர் காண - காணுந் தகுதியுடையோர் காணும்படி, திருக்கயிலை இருத்தி என்றால் - திருக்கயிலாயத்தில் இருப்பையாயின், நிலை - (உனதுநிலையை),

ஒருத்தர் அறிவான் உறுவார்க்கு - அறிய முயல்வோராகிய ஒருவருக்கு, அறியும் ஆறு உண்டோ - அறியும் வழியுளதோ, எ - று.

நெறி - நன்னெறியையுடைய எனினுமமையும். இதனை "பொறி வாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்க, நெறிநின்றார் நீடுவாழ்வார்" என்பதனாலு முணர்க. கருத்துக்குச் சேயனாதல் எம்மனோர்க்கு என்றும், காணவிருத்தல் காண்டக்கோர்க்கு என்றும் கொள்க. எம்மனோர் கண்ணுக்கேயன்றிக் கருத்துக்கும் புலப்படாதவன், காண்டக்கோர் கருத்துக்கேயன்றிக் கண்ணுக்கும் புலப்படுவான் என்றவாறாயிற்று. புலப்படாமையும் புலப்படுதலுமாகிய இருதன்மையனாய் நிற்கும் உனதுநிலையை அறியவல்லார் யாவர் என்பது கருத்து.

காளத்தி.

16. நிலையில்பிறவிநெடுஞ்சுழியிற்பட்டுத்
தலைவதடுமாறுகின்றேன் - றொலைவின்றிப்
போந்தேறக்கைதாராய்காளத்திப்புத்தேளிர்
வேந்தேயிப்பாசத்தைவிட்டு.

இ - ள். தலைவ - தலைவனே, காளத்தி - திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கிற, புத்தேளிர் வேந்தே - தேவர்பிரானே, நிலை இல் - நிலையற்ற, பிறவி - பிறவிக்கடலின், நெடுசுழியில்பட்டு - பெருஞ்சுழியில் அகப்பட்டு, தொலைவு இன்றி தடுமாறுகின்றேன் - முடிவில்லாமல் தடுமாறுகின்றேன், (ஆதலால்) இப்பாசத்தைவிட்டு - இந்தப் பிரபஞ்ச ஆசையை விட்டு, போந்து ஏற - வந்து முத்திக்கரையிலேறுதற்கு, கைதாராய் - நீ கைதரவேண்டும், எ - று.

மாறிமாறிப் பல்பிறப்பும் பிறத்தலால் "நிலையில் பிறவி" என்றும், அப்பிறவி ஒன்றன் பின்னொன்று காரணகாரிய முறையாகவருதலால், "தொலைவின்றி" என்றும், இறைவன் கைதராதொழியின் இந்தப் பிறவிக்கடலைக் கடக்கவொண்ணாதாகையால் "கைதாராய்" என்றும், "கடந்தவாறே கரையேற வேண்டுமாதலால், "போந்தேற" என்றும் கூறினார். பிறவியைக் கடலாகக்கோடலால், ஏற என்பதற்கு முத்திக்கரையிலேற என்றுரைக்கலாயிற்று. தலைவஎன்றது அமையாமல் புத்தேளிர்வேந்தே என்றது எம்மனோர்க்குத்தலைவனாதலேயன்றி,தேவர்களுக்குந் தலைவனாதலைவற்புறுத்தற்கு. புத்தேளிர் என்றது பிரமன் முதலியோரை.

கயிலை

17. பாசத்தைவிட்டுநின்பாதத்தின்கீழேயென்
னேசத்தைவைக்கநினைகண்டாய் - பாசத்தை
நீக்குமாவல்லகயிலாயாநீயென்னைக்
காக்குமாறித்தனையேகாண்.

இ - ள். பாசத்தைவிட்டு - (இந்தப்பிரபஞ்சப்) பற்றைவிட்டு, நின் பாதத்தின்கீழே-உன்திருவடியிலே, என் நேசத்தைவைக்க - என் அன்பை வைக்கும்படி, நினை - நீ திருவுளத்திற் சங்கற்பிக்கவேண்டும், பாசத்தை நீக்கும் ஆறுவல்ல - பாசத்தையொழிக்கும் வழியில்லையல்ல, கயிலாய - திருக்கயிலாயனே, நீ என்னைக்காக்கும் ஆறு - நீ என்னைக்காத்தருளும்வகை, இத்தனையே - இவ்வளவே, எ - று.

கண்டாய், காண் என்பன முன்னிலை யசையிடைச்சொற்கள். இந்த உலகப்பற்று நீங்கி உன் திருவடியின்கண் யான் அன்புவைக்கும்படி நீ திருவுளம்பற்றவேண்டும், அவ்வாறு திருவுளம்பற்றலே நீயென்னைக்காத்தருளலாய் முடியும் என்பது கருத்து. இறைவனது திருவடியில் அன்பைவைக்கவே அவன் பாசத்தையொழித்து முத்திதந்தருளுவனாதலால் இவ்வாறு கூறினார். இது - "ஈசற்கியான் வைத்தவன் பினகன்றவன்வாங்கிய வென் பாசத்திற்காரொன்று" என்பதனால் இனிதுவிளங்கும். பாசம் - பஞ்சபாசத்தடை எனினுமாம்.

## காளத்தி.

18 காணாதலக்கின்றார்வானோர்கள்காளத்திப்
பூணாரமார்வன்றன்பொற்பாத - நாணாதே
கண்டிடுவான்யானிருந்தேன்காணீர்கடனஞ்சை
யுண்டிடுவான்றன்னையொருங்கு.

இ - ள். வானோர்கள் - தேவர்களும், காளத்தி - திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கிற, பூண் ஆரம் மார்வன்தன் - தரித்தற்குரிய ஆரங்களைத் தரித்த திருமார்பினையுடையவனாகிய சிவபெருமானது,பொன்பாதம்-பொன் போலுந்திருவடியொன்றனையும், காணாது அலக்கின்றார்-காணமாட்டாது வருந்தாநின்றார், (அங்ஙனமாக) யான் - நான், நாணாதே-நாணாமல், கடல் நஞ்சை உண்டிடுவான் தன்னை - பாற்கடலிற்றோன்றிய விஷத்தைப் பருகினவனாகிய சிவபெருமானை, ஒருங்கு - ஒருசேர (முழுதும்), கண்டிடுவான் இருந்தேன் - காணத்துணிந்திருக்கிறேன், காணீர் - (சான்றோரே) எனதறியாமையாகிய இதனை நீங்கள் பாருங்கள், எ - று.

திருக்காளத்தியப்பரது திருவடியொன்றனையுங் காணாது தேவர்கள் திகைப்பதைக் கேட்டறிந்தும் சிறிதும்நாணாமல்அவனைமுழுதுமே காணத் துணிந்திருக்கிற எனதறியாமையை நீங்கள் பாருங்கள் என்பது கருத்து. பூணாரம் - ஆபரணம் எனினுமாம். அது இவ்விடத்துச் சர்ப்பாபரணத்துக் காயிற்று. "புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே யுண்டியாயண்டவாணரும் பிறரும், வற்றியாரு நின்மலரடிகாணார்" என்றார் திருவாதவூரடிகளும்.

கயிலை.

**19.** ஒருங்காதுடனேநின்றோரைவரெம்மை
நெருங்காமனித்தமொருகா - னெருங்கிக்
கருங்கலோங்கும்பற்கயிலாயமேயான்
வருங்கொலோநம்பான்மதித்து.

**இ - ள்.** ஓர் ஐவர் - ஒப்பற்ற (இந்திரியங்களாகிய) ஐவரும், உடனே நின்று - உடன்கூடியிருந்து, ஒருங்காது - (எமக்கு) அடங்காமல் நின்று, எம்மை நெருங்காமல் - எம்மை அழிக்காமலிருக்கும்படி, நெருங்கி- நெருக்கமடைந்து, கருகல் ஓங்கு உம்பல் - கரியமலைபோலுயர்ந்த யானைகள் சஞ்சரித்தற்குரிய, கயிலாயம்மே யான் - திருக்கயிலாயத்திலெழுந்தருளியிருக்கும் சிவபெருமான், நம்பால் மதித்து - நம்மிடத்துத் திருவுளம் வைத்து, நித்தம் ஒருகால் வருங்கொலோ - நாள்தோறும் ஒருதரம் எழுந்தருளுவனோ, எ-று.

பிறவிக்கேதுவாகிய விஷயங்களில் இழுத்துச்செல்லும் பெருவலியுடைமையால் இந்திரியங்களை ஓரைவர்என்றும், இறைவன்பொறிவாயிலைந்தவித்தானாதலால் அவன் நித்தமொருகால் நம்பால் மதித்துவருவனாயின் இவ்வைவர் எமக்கு அடங்கியிருப்பர் என்றற்கு, "கயிலாயமே யான் நித்தமொருகால் வருங்கொலோ" என்றும் கூறினார். மதித்து என்பதற்கு என்னையும் ஒருபொருளாக நினைத்து எனினுமாம். "பொருளா வெனைப்புகுந்தாண்டு" என்றார் திருவாதவூரடிகளும்.

காளத்தி.

**20.** நம்பாநின்மதித்துறையுங்காளத்திநண்ணாதே
வம்பார்மலர்தூய்வணங்காதே - நம்பாநின்
சீலங்களேத்தாதேதீவினையேன்யானிருந்தேன்
காலங்கள்போனகழிந்து.

**இ - ள்.** நம்பா - நம்பனே, நம்பால்மதித்து - எம்மிடத்து மதித்தலைச்செய்து, உறையும் - நீவாசம்பண்ணுகிற, காளத்தி - திருக்காளத்தியை, நண்ணாதே - அடையாமலும், வம்புஆர் மலர் தூய்வணங்காதே-மணம் நிறைந்த மலர்களைத்தூவி உன்னைத்தொழாமலும், நின்சீலங்கள் ஏத்தாதே- உன் மங்களகுணங்களைத் துதியாமலும், தீவினையேன் யான் இருந்தேன் - தீவினையையுடையேனாகிய நானிருந்தேன், காலங்கள் கழிந்துபோன-என் ஆயுள்நாட்கள் ஒழிந்துபோயின, எ - று.

நம்பன் - மங்களகுணபூர்ணன். சீலம்-சச்சரித்திரம், அன்றி நல்லொழுக்கம் எனினுமாம். இறைவன், உயிர்கள் எளிதிற்கண்டுய்யுமாறு தென்கயிலையாகிய திருக்காளத்தியி லெழுந்தருளியிருத்தலால், நம்பான் மதித்துறையுங் காளத்தி" என்றும், இவ்வாறெளிதிற்சேர்தற்கும், அவனை மலர்தூவிவணங்குதற்கும், அவனது மங்களகுணங்களைத் துதித்தற்கும் உரிமையிருக்க இவற்றைச் செய்யாதழிகின்றேனே யென்றற்கு, "நண்ணேதே, வம்பார் மலர்தூய்வணங்காதே, நின்சீலங்களேத்தாதே யான இருந்தேன்" என்றும், எவ்வாறிருப்பினும் ஆயுள்நாட்கள் வீணாவாய்க்கழிகின்றன என்றற்கு "காலங்கள்போனகழிந்து" என்றும், காளத்திநண்ணாமை முதலியவற்றிற்குக் காரணம் தீவினையே என்றற்கு, "தீவினையேன்"என்றும் கூறினர். நம்பனுக்கும் சீலங்களுக்கும் பொருத்த முண்மை காண்க.

### கயிலை.

**21.** கழிந்தகழிகிலாய்நெஞ்சேகழியா
தொழிந்தநாண்மேற்பட்டுயர்ந்தோர் - மொழிந்தசீர்க்
கண்ணுதலானெந்தைகயிலாயமால்வரையை
நண்ணுதலாநன்மைநமக்கு.

இ - ள். நெஞ்சே - மனமே,கழிந்த - சென்ற நம்வாழ்நாளைப்பற்றி, கழிகிலாய் - நீயிரங்குகின்றாயில்லை, கழியாது ஒழிந்தநாள் - கழியாது நின்றநாளாயினும், மேற்பட்டு உயர்ந்தோர் - மேம்பாடடைந்துஉயர்ந்தவர், மொழிந்த-புகழ்ந்த, சீர் - சிறப்பினையுடைய, கண் நுதலான் எந்தை - நெற்றிக்கண்ணனாகிய எமதுதந்தையின், கயிலாயம் மால்வரையை - திருக்கயிலாயமென்னும் பெருமையமைந்த மலையை, நண்ணுதல் - அடைதல், நமக்கு நன்மை ஆம் - நமக்கு நன்மையாகும், எ - று.

மனமே; கழிந்த நம்வாழ்நாளுக் கிரங்கினையில்லை, கழியாது எஞ்சிநின்ற நாட்களிலாயினும் உயர்ந்தோர் புகழ்ந்த நம்மிறைவனது திருக்கயிலாயத்தை அடைதல் நமக்கு நன்மையாகும் என்பது கருத்து.

### காளத்தி.

**22.** நமக்கிசைந்தவாறநாமுமேத்தினனம்பர்
தமக்கழகுதாமேயறிவ - ரமைப்பொதும்பிற்
கல்லவாரீடருவிக்காளத்தியாள்வாரை
வல்லவாநெஞ்சமேவாழ்த்து.

இ - ள். நெஞ்சமே - மனமே, நமக்கு இசைந்த ஆறு-நமக்கிசைந்த வழியாக, நாமும் ஏத்தினல் - நாமும்துதிப்போமாயின், நம்பர் - சிவபெரு

மானும், தமக்கு அழகுதாமே அறிவர் - தமக்கு அழகாகிய காரியத்தைச் (செய்யத்) தாமேயறிவர் (ஆதலால்), அமைபொதும்பின் - மூங்கிற்புதர்களோடு, கல்ல ஆம் - கற்களையுமுடையனவாகிய, நீடு அருவி - நீண்ட அருவியாறுகளையுடைய, காளத்தி ஆள்வானை - திருக்காளத்தி யாள்வானை, வல்ல ஆறுவாழ்த்து - வல்லவகையாய்த் துதிசெய், எ - று.

தமக்கழகாவது - வாழ்த்தினளவுக் கேற்பப்பயனளித்தல்.

மனமே; திருக்காளத்தியிறைவனை நமக்கிசைந்தவாறு துதிப்போமாயின், அவர் நம்பரி பக்குவத்துக்கேற்ற பயனளிப்பார் என்பது கருத்து.

கயிலை.

**23.** வாழ்த்துவாய்வாழ்த்தாதொழிவாய்மறுசுழியிட்
டாழ்த்துவாயஃதறிவாய்நீயன்றே - யாழ்த்தகைய
வண்டார்பொழிற்கயிலைவாழ்கென்றிருப்பதே
கண்டாயடியேன்கடன்.

இ - ள். (மனமே); வாழ்த்துவாய் - வாழ்த்தக்கடவை, வாழ்த்தாது ஒழிவாய் - வாழ்த்தாதொழியக்கடவை, மறு சுழி இட்டு ஆழ்த்துவாய் - மறுபிறவியாகிய சுழியின்கண் வீழ்த்தியழுத்தக்கடவை, அஃது அறிவாய் நீ அன்றே - அத்தன்மையை யறியவல்லாய் நீயல்லவா, யாழ்தகைய - வீணையினழகையுடைய, வண்டு ஆர் பொழில் - வண்டுகள்நிறைந்த சோலைசூழ்ந்த, கயிலை - திருக்கயிலாயமானது, வாழ்க என்று இருப்பதே - நீடூழி வாழ்வதாக என்று சிந்தித்திருப்பதே, அடியேன் கடன் - அடியேனுக்குக் கடன்மையாகும், எ - று.

தகை - பெருமையெனினுமாம். யாழுக்கு அழகு, அன்றிப் பெருமையாவது - கேட்போர்க்கினிதாகிய ஓசையையுடையதாதல். மனமே; நீ எவ்வாறிருப்பினும் இருக்கக்கடவை, திருக்கயிலாயமலையானது நீடூழி வாழ்கவென்று சிந்தித்திருப்பதே என்கடன் என்பதாம்,

காளத்தி.

**24.** கடநாகமூடாடுங்காளத்திக்கோனைக்
கடனாகக்கைதொழுவார்க்கில்லை - யிடநாடி
யிந்நாட்டிற்கேவந்திங்கீண்டீட்டிக்கொண்டுபோ
யந்நாட்டிலுண்டுழலுமாறு.

இ - ள். இடம்நாடி - தாம் பிறப்பிடத்தைநாடி, இந்நாட்டிற்கே வந்து - இவ்வுலகில் வந்துபிறந்து, இங்கு ஈண்ட ஈட்டிக்கொண்டுபோய் - இங்கு புண்ணியபாபங்களை மிகுதியாகச் சம்பாதித்துக்கொண்டுபோய், அந்

நாட்டில் - மறுமையில், உண்டு - அநுபவித்து,உழலும் ஆறு - உழலும்வழி, கடநாகம் ஊடாடும் - மதயானைகள் சஞ்சரித்தற்கிடமாகிய, காளத்தி - திருக்காளத்தியிலெழுந்தருளிய, கோனை - இறைவனை, கடன் ஆக கை தொழுவார்க்கு இல்லை - தமது கடன்மையாகக்கொண்டு கைகூப்பிவணங்கு வாருக்கு இல்லையாகும், எ - று.

இவ்வுலகில் வந்துபிறந்து தாம்செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ற புண்ணியபாபங்களை யீட்டிக்கொண்டுபோய் மறுமையில் அநுபவித்துழலல் திருக்காளத்தி யிறைவனைக் கைகூப்பி வணங்குவாருக் கில்லையாகும் என்பதாம். அந்நாடு - விண்ணுலகம் எனினுமாம்.

கயிலை.

25 மாறிப்பிறந்துவழியிடையாற்றிடை
யேறியிழியுமிதுவல்லாற் - றேறித்
திருக்கயிலையேத்தீரேல்சேமத்தால்யார்க்கு
மிருக்கயிலைக்கண்டீரினிது.

இ - ள். மாறிபிறந்து - உருமாறிப்பிறந்து, வழி-(அவ்வாறு பிறந்து ழலு)மிடத்து,இடை ஆற்றிடை-இடைவழியில்,ஏறி இழியும் இது அல்லால்-(புண்ணிய பாவங்களுக்கீடாக சுவர்க்காதிகளில்) ஏறி (நாகாதிகளில்) இழி கின்ற இத்தொழிலை யல்லது, தேறி - தெளிந்து, திருக்கயிலை ஏத்தீர் எல்-திருக்கயிலாயத்தைத் துதியீராயின், யார்க்கும்-யாவருக்கும், இனிது சேமத்தால் இருக்கய் இலை-இனிதான இன்பத்தோடுகூடியிருத்தல்அரிது.

கண்டீர் - முன்னிலையசை. இருக்கைஇருக்கய் எனப்போலியாயிற்று.

காளத்தி.

26. இனிதேபிறவியினமரங்களேறிக்
கனிதேர்கடுவன்கடம்மின் - முனிவாய்ப்
பிணங்கிவருந்தண்சாரற்காளத்திபேணி
வணங்கவல்லராயின்மகிழ்ந்து.

இ - ள். இனம்மரங்கள் ஏறி - கூட்டமாகிய மரங்களில் ஏறி, கனி தேர் கடுவன்கள் - பழங்களை யாராய்கின்ற குரங்குகள், தம்மில் - தம்முள், முனிவு ஆய் - கோவங்கொண்டு, பிணங்கிவரும் - பிணங்கிவருகின்ற, தண் சாரல் - குளிர்ச்சியாகிய சாரலையுடைய, காளத்தி - திருக்காளத்தியை, பேணி மகிழ்ந்து வணங்கவல்லர் ஆயின் - (ஒருவர்) விரும்பி மகிழ்ந்து தொழவல்லரானல், (அவர்க்கு) பிறவி இனிதே - பிறத்தலும் இன்பந்தரு வதேயாம், எ - று,

இனமரங்களாதலால் கனிதேர்தற்குரியவாயின. பிணக்கத்துக்குக்காரணம்ஒன்று தேர்ந்தகனியை மற்றொன்று பறித்துக்கோடல். பேணிவணங்க லருமைதோன்ற, "வல்லராயின்" என்றார். திருக்காளத்தியை விரும்பி வணங்கவல்லார்க்குத் துன்பந்தருவதாகிய பிறப்பும் இன்பந்தருவதாம் என்பதுகருத்து "இறவிலெப்பதமும்பெறவேண்டிலேனென்றும், பிறவிவேண்டுவனின் திருப்பணிசெயப்பெறினே" என்றார் பிறரும்.

கயிலை.

**27.** மகிழ்ந்தலரும்வண்கொன்றைமேலேமனமாய்
நெகிழ்ந்துநெகிழ்ந்துள்ளேநெக்குத் - திகழ்ந்திலங்கும்
விண்ணுறங்காவோங்கும்வியன்கயிலைமேயாயென்
பெண்ணுறங்காளென்செய்கேன்பேசு.

இ - ள். திகழ்ந்து இலங்கும் - மிக்கு விளங்குகின்ற, விண் உற அம் காஓங்கும் - மேகங்கள் படியும்படி அழகிய சோலைகள் உயர்ந்த, வியன் கயிலைமேயாய் - பெருமை யமைந்த திருக்கயிலாயத்தில் எழுந்தருளினவனே, என்பெண் - என்பெண்ணானவள், மகிழ்ந்து - களித்து, அலரும் வள் கொன்றைமேலேமனம் ஆய் - மலர்கின்ற வளவிய உன் கொன்றைமாலையின்மீது மனமுள்ளவளாகி, உள்ளேநெகிழ்ந்து நெகிழ்ந்து நெக்கு - உள்ளேயுருகி யுருகி, உறங்காள் - கண்ணுறங்காள், என்செய்கேன் - (இதற்கு யான்) என்செய்யக்கடவேன், பேசு - நீயேசொல்வாய், எ - று.

விண்உற - மேகத்தை அல்லது ஆகாயத்தைத் தீண்டும்படி எனினுமாம். திருக்கயிலைநாயகனே, என்பெண்ணானவள் உன்கொன்றை மாலையின்மீது விருப்பமுள்ளவளாய் நித்திரையையும் நீங்கினாள், அவளுக்கு இவ்வகையாகிய மையலைத்தந்தநீயே இதற்குப் பரிஹாரமுஞ் சொல்லவேண்டுமென்பதாம். இது நற்றாயிரங்கல்.

காளத்தி.

**28.** பேசும்பரிசறியாள்பேதைபிறர்க்கெல்லா
மேசும்பரிசானாளேபாவ - மாசுனைநீர்க்
காம்பசலையாலிக்குங்காளத்தியென்றென்று
பூம்பசலைமெய்ம்முழுதும்போர்த்து.

இ - ள். பேசும் பரிசு அறியாள் பேதை - பேசும்வகை யறியாதவளாகிய (என்) பேதைப்பெண்ணானவள், மாசுனை நீர் - பெரிதாகிய சுனைநீரோடு, காம்பு - மூங்கில்களும், அசலை - மலையின்மீது, ஆலிக்கும் - ஒலிக்கின்ற, காளத்தி என்று என்று - திருக்காளத்தியென்று பலகாற்சொல்லி, பூபசலை மெய்முழுதும் போர்த்து - அழகிய பசலை நிறத்தால் உடம்பு முழு

தும் மூடப்பட்டு, பிறர்க்கு எல்லாம் - அயலாரெல்லாராலும், ஏசும்பரிசு ஆனாள் - பழிதூற்றப்படுந்தன்மையளானாள், ஏபாவம் - இதென்னபாவம், எ - று.

இதுவும் நற்றாயிரங்கல் என்பேதைப்பருவப் பெண்ணானவள், திருக்காளத்தி யென்றுபலகாற்சொல்லி, உடம்புமுழுதும் பசலை போர்த்து, அயலார்பழிதூற்றுதற்குரியளானாள், இதென்னபாவம் என்பதாம். பசலை- இயற்கை மாறுபட்டநிறம்.

கயிலை.

**29.** போர்த்தகளிற்றுரியும்பூண்டபொறியரவுந்
தீர்த்தமகளிருந்தசெஞ்சடையு - மூர்த்தி
குயிலாயமென்மொழியாள்கூறாயவாறுங்
கயிலாயயான்காணக்காட்டு.

இ - ள். கயிலாய - திருக்கயிலாயத்தை யுடையவனே, போர்த்த களிற்றுஉரியும் -நீ திருமேனிமீது போர்த்த யானைத்தோலையும், பூண்டபொறி அரவும்-நீ (ஆபரணமாகத்) தரித்தபுள்ளிகளையுடைய பாம்புகளையும், தீர்த்தமகள் இருந்த செஞ்சடையும் - கங்கா தேவிதங்கியிருக்கிற செவந்த சடாபாரத்தையும், மூர்த்தி - உன்திருமேனியில், குயில் ஆயமென்மொழியாள்-குயிலோசை போலும் மெல்லிய மொழியினையுடையவளாகிய உமாதேவி, கூறு ஆயஆறும் - பாகமான விதத்தையும், யான்காணகாட்டு-நான் காணும்படி காட்டுவாய், எ - று.

திருக்கயிலாயத்திலெழுந்தருளியிருப்பவனே; உன்யானைத்தோற்போர்வையையும், சர்ப்பா பரணத்தையும், கங்கைச்சடையையும், உமாதேவியிருக்கும் இடப்பாகத்தையும் யான் கண்டுகளிக்கக் காட்ட வேண்டும் என்பதாம்.

காளத்தி.

**30.** காட்டினடமாடிக்கங்காளராகிப்போய்
நாட்டிற்பலிபுகுந்துநாடோறு - மோட்டுண்பா
ராறாலுமென்கொலோகாளத்தியாள்வாரை
வானோர்வணங்குமாவந்து.

இ - ள். காட்டில் - புறங்காட்டில், நடம் ஆடி - நிருத்தஞ்செய்து, கங்காளர் ஆகி - கங்காளத்தை யுடையவராகி, போய் - சென்று, நாள்தோறும் நாட்டில் பலி புகுந்து - நாள்தோறும் ஊரில்பிச்சையேற்கப் புகுந்து, ஓட்டுஉண்பார் ஆனாலும் - ஓட்டில் உண்பவரோ ஆயினும், காளத்தி ஆள்வாரை - திருக்காளத்தி யாள்வாரை, வானோர் - தேவர்கள், வந்துவணங்கும் ஆறுஎன் கொலோ - வந்து தொழும் விதம் என்னையோ, எ - று.

காடு - இடுகாடு சுடுகாடு என்பவற்றிற்குப்பொது. புறங்காடு - மயானம், கங்காளம் - முழுவெலும்பு. திருக்காளத்தியாள்வார், நடனம் பண்ணுவதும யானத்தில், சுமப்பது கங்காளம், நாள்தோறும் ஊரில் ஏற்பது பிச்சை, உண்பது ஓட்டில்; இப்படியிருந்தாலும், இவரைத்தேவர்களெல்லாரும் வந்து வணங்குதற்குக் காரணமென்னையோ என்பதாம்.

கயிலை.

**31.** வந்தமரரேத்துமடைக்கூழும்வார்சடைமேற்
கொந்தவிழுமாலைகொடுத்தார்கொல் - வந்தித்து
வாலுருத்தவண்கயிலைக்கோமான்மணிமுடிமேற்
பாலுகுத்தமாணிக்குப்பண்டு

இ - ள். பண்டு - முற்காலத்தில், வந்தித்து - துதித்து, வால் உருத்தவள் கயிலை கோமான் - வெள்ளொளியைப் பரப்புகின்ற வளவிய திருக்கயிலாயத்துக்கு வேந்தனாகிய சிவபெருமானனவர், மணிமுடிமேல் - (தம்) அழகிய திருமுடிமீது, பால்உகுத்த - பாலை அபிஷேகஞ்செய்த, மாணிக்கு - பிரமசாரியாகிய சண்டேசுர நாயனாருக்கு, அமரர் வந்து ஏத்தும் - தேவர் வந்து தோத்திரம் பண்ணுகிற, மடைக்கூழும் - தமது பரிகலசேஷத்தையும், வார்சடைமேல் - நீண்டசடையின்மீதணிந்த, கொந்து அவிழும் மாலை - பூங்கொத்துகள் விரிகின்றமாலையையும், கொடுத்தார் - தந்தருளினார், எ - று.

கொல் - அசை. "அமரரேத்து மடைக்கூழும்வார் சடைமேற்கொந்தவிழுமாலை கொடுத்தார்" என்றமையால், இறைவனது பரிகல சேஷத்தினேற்றமும், மாலையின்பெருமையும், மாணியின் புண்ணிய விசேடமும் விளங்குகின்றன. பரிகலசேஷ முதலியவற்றைச் சண்டேசுர நாயனாருக்குச் சமர்ப்பிக்கும் வழக்கம் இப்போதுங் காணலாம்.

காளத்தி.

**32.** பண்டிதுவேயன்றாகிற்கேளீர்கொல்பல்சருகு
கொண்டிலிங்கத்தும்பினூற்கூடிழைப்பக் - கண்டு
நலந்திக்கெலாமேத்துங்காளத்திநாதர்
சிலந்திக்குச்செய்தசிறப்பு.

இ - ள். பண்டு இதுவே அன்று ஆகில் - முற்காலத்து நிகழ்ந்த இந்தச்சரித்திரமே (உமக்குச்சம்மதம்) அன்றாயின், பல்சருகு கொண்ட இலிங்கத்தும் - பல்சருகு களைத்தம்மீது கொண்டிருந்த சிவலிங்கப்பெருமான்மீதும், பின் நூல் - பின்னப்பட்ட நூலைக்கொண்டு, கூடு இழைப்ப - கூட்டைச்செய்ய, கண்டு - (அதன் பத்திவிசேடத்தை) நோக்கி, திக்கு எல்லாம் -

திக்குகளிலுள்ளார் எல்லாரும், நலம் ஏத்தும் - (தமது) நன்மையை யெடுத்துப் புகழ்தற்குரிய, காளத்திநாதர் - திருக்காளத்தி யிறைவர், சிலந்திக்குச் செய்தசிறப்பு - சிலந்திப் பூச்சிக்குச் செய்த மேன்மையை யாயினும், கேளீர் சொல் - (நீங்கள்) கேட்டிலிரோ, எ - று.

"பண்டி துவேயன் முகில்" என்பது மேற்பாட்டின் செய்தியைக்குறித்தது.

கயிலை.

**33.** செய்தசிறப்பெண்ணிலெங்குலக்குஞ்சென்றடைந்து
கைதொழுவார்க்கெந்தைகயிலாயர் - நொய்தளவிற்
காலற்காய்ந்தா ரன்றேகாணீர்கழறொழுத
பாலற்காயன்றுபரிந்து.

இ - ள். எந்தைகயிலாயர் - எமது தந்தையாகிய திருக்கயிலாயநாதர், கழல் தொழுத - தமது திருவடியைப் பூசித்து வணங்கின, பாலற்காய் - பாலகனுக்காக, அன்று - அந்நாளில், பரிந்து - இரங்கி யருளி, நொய்து அளவில் - சிறிதுபோதில், காலன்காய்ந்தார் - யமனைக் கோபித்துஉதைத்தார், காணீர் - (இதனை நீங்கள் பூர்வகாலத்துப் புராணங்களில்) பாருங்கள், (இங்ஙனஞ் செய்தஇவர்) சென்று அடைந்து கைதொழுவார்க்கு - சென்றுசேர்ந்து கை கூப்பி வணங்குவோர்க்கு, செய்த சிறப்பு எண்ணில் - செய்த மேன்மையை மதித்து நோக்கினால், எங்கு உலக்கும் - எப்படி முடிவு பெறும், எ - று.

கழல் தொழுதபாலன் - மார்க்கண்டன். இவன் கழல் தொழுதமையால் கழலேதனக்குத்துணையாகி யமனையுதைத்தது. காலற்காய்ந்தது திருக்கடவூரில். இருந்த இடத்தே யிருந்து பூசித்து வழிபட்டபாலனுக்கிரங்கி யமனையுதைத்தவர், தமது திருக்கயிலாயத்தை யடைந்து தம்மைப் பூசித்துக்கைதொழுவார்க்குச் செய்யுஞ் சிறப்புக்கு ஓர்முடி வுண்டோ என்பதுகருத்து.

காளத்தி.

**34.** பரிந்துரைப்பார்சொற்கேளாளெம்பெருமான்பாதம்
பிரிந்திருக்ககில்லாமைபேசும் - புரிந்தமரர்
நாதாவாகாளத்திநம்பாவாவென்றென்று
மாதாவாவுற்றமயல்.

இ - ள். மாது - என்பெண்ணானவள், புரிந்து - விரும்பி, அமரர் நாதாவா - தேவர்பிரானேவருவாயாக, காளத்தி நம்பாவா - திருக்காளத்தியிலெழுந் தருளியிருக்கிற சிவபெருமானே வருவாயாக, என்று என்று - என்று பலமுறைசொல்லி, ஆவா - அந்தோ, உற்றமயல் - அடைந்தமைய

விருந்தவாறென்ன வியப்பு, (என்னெனின்) பரிந்து உரைப்பார்சொல், கேளாள் - தன்னிடத்தன்பு கொண்டு சொல்லுவோரது சொல்லைக்கேளாள், எம்பெருமான்பாதம் - எம்பெருமானது திருவடியை, பிரிந்து இருக்கவில்லாமை பேசும் - பிரிந்திருக்க மாட்டாமையையே எடுத்துப்பேசுவாள், எ - று.

ஆவா என்பது வியப்பின்கட் குறிப்பு இம்மாது தன்பருவத்திற்கேலாத மிகுமையல் பூண்டாள் எனத் தாய் வியந்து கூறினாளாதலால் வியப்பாயிற்று. "ஆவாவிருவரறியாவடி தில்லையம்பலத்து, மூவாயிரவர் வணங்க நின்றோனை யுன்னாரின் முன்னித், தீவாயுழுவை கிழித்ததந்தோ சிறிதே பிழைப்பித், தாவாமணி வேல் பணிகொண்டவாறின் றொராண்டகையே" என்பது திருக்கோவையார். இதற்குநச்சினார்க்கினியரியற்றிப் உரையில், "இறுதிக்கண் ஆவாவென்பது வியப்பின் கட்குறிப்பு" எனக்கூறியிருத்தல்காண்க.

கயிலை.

35. மயலைத்தவிர்க்கநீவாராயொருமூன்
றெயிலைப்யொடியாகவெய்தாய் - கயிலைப்
பருப்பதவாநின்னுடையபாதத்தின்கீழே
யிருப்பதவாவுற்றாளிவள்.

இ - ள். பொடிஆக ஒருமூன்று எயிலை எயதாய் - நீறாகும்படி ஒப்பற்ற மும்மதில்களையும் எய்தவனே, கயிலைபருப்பத - திருக்கயிலாய மலையையுடையவனே, ஆ - ஆ, இவள் - இம்மாது, நின்னுடைய பாதத்தின் கீழே இருப்பது - உன் திருவடியின்கீழே இறுமாந்து இருத்தலை, அவாவுற்றாள் - விரும்பினாள், (ஆதலால்) மயலைதவிர்க்க - (இவளது) மையலைநீக்கும் பொருட்டு, நீவாராய் - நீவருவாயாக. எ-று.

ஆ - வியப்பின்கண்வந்தது. திருக்கயிலைநாயகனே; இவள் உன்பாதத்தின்கீழ் இறுமாந்திருக்க விரும்பினாளாதலால், இவளது மையலைத் தணித்தருளும்பொருட்டு நீவரவேண்டும் என்பதாம். "இறுமாந் திருப்பன்கொலோ, ஈசன் பல்கணத்தெண்ணப்பட்டுச், சிறுமானேந்தி தன்சேவடிக் கீழ்ச்சென்றங் கிறுமாந்திருப்பன் கொலோ" என்பது ஸ்ரீவாகீசரது ஸ்ரீஸூக்தி.

காளத்தி.

36. இவளுக்குநல்லவாறெண்ணுதிரோவின்றே
தவளப்பொடியிவண்மேற்சாத்தி - யிவளுக்குக்
காட்டுமின்கள்காளத்திகாட்டிக்கமழ்கொன்றை
சூட்டுமின்கடீருந்துயர்.

இ - ள். இவளுக்கு - இந்தப்பெண்ணுக்கு, நல்ல ஆறு எண்ணுதிரேல் - நல்லவழியை நினைப்பீராயின், இன்றே - இப்பொழுதே, இவள்மேல் - இவள்மீது, தவளப்பொடிசாத்தி - வெண்பொடியையணிந்து, இவளுக்கு - இந்தப்பெண்ணுக்கு, காளத்தி - திருக்காளத்தியை, காட்டுமின்கள் - காட்டுங்கள், காட்டி - காட்டி, (பிறகு) கமழ்கொன்றை - (காளத்திநாதரது) பரிமளிக்கின்ற கொன்றைமலர்மாலையை, சூட்டுமின்கள் - சூட்டுங்கள், (இங்ஙனஞ் செய்வீராயின்) துயர்தீரும் - (இவளது) துன்பம் நீங்கும், எ - று.

தவளப்பொடி - திருவெண்ணீறு. இது செவிலிகூறியது.

கயிலை.

37. துயர்க்கெலாங்கூடாயதோற்குரம்பைபுக்கு
மயக்கில்வழிகாணமாட்டேன் - வியற்கொடும்போ
ரேற்றானேவண்கயிலையெம்மானேயென்கொலோ
மேற்றானிதற்குவிளைவு.

இ - ள். துயர்க்கு எல்லாம்கூடு ஆய - எல்லாத் துன்பங்களுக்கும் கூடாகிய, தோல்குரம்பைபுக்கு - தோலாற்செய்த சிறுகுடிலாகிய உடம்பிற்புகுந்து, மயக்கு இல்வழி - மயக்கமற்ற நன்னெறியை, காணமாட்டேன் - காணமாட்டாதவனாயிருக்கிறேன், வியல் - பெருமையுள்ள, கொடு போர் - கொடிய போர்த்தொழிலில்வல்ல, ஏற்றானே - இடபத்தையுடையவனே, வண்கயிலை எம்மானே - வளமாகிய திருக்கயிலையிலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே, மேல்தான் - இனிமேலாயினும், இதற்கு விளைவு என்கொலோ - இப்படியிருக்கிற எனதுநிலைக்கு உளதாகும் பயன்யாதோ (அறியேன்), எ - று.

காளத்தி.

38. விளையும்வினையரவின்வெய்யவிடத்தைக்
களைமினோகாளத்தியாள்வார் - வளைவி
றிருந்தியசீரீசன்றிருநாமமென்னு
மருந்தினைநீர்வாயிலேவைத்து.

இ - ள். காளத்தியாள்வார் - திருக்காளத்தியாள்வார், வளைவு இல் - கோடுதலில்லாத, திருந்திய சீர் - திருத்தமாகிய சிறப்பினையுடைய, ஈசன் - ஈச்சுரன், (அவனது) திருநாமம் என்னும் - திருநாமமென்கிற, மருந்தினை - ஔஷதத்தை, வாயிலேவைத்து - வாயிலிட்டு, விளையும்வினை அரவின் - விருத்தியடைகின்ற வினைகளாகிய பாம்புகளின், வெய்யவிடத்தை - கொடியவிஷத்தை, களைமின் - (நீங்கள்) வேரறுங்கள், எ - று.

வினையரவின் விளையும்விடத்தை என இயையும். வினையரவின் விளையும்விடத்தை என்பதற்கு வினையாகிய பாம்பினின்றும் உண்டாகின்ற விஷத்தை என்றுரைப்பினுமாம். வினையாகிய பாம்பினின்று முண்டாகின்ற பிறவியாகிய விஷத்தைத் திருக்காளத்தியீசனது திருநாமமாகிய மருந்தை வாயிலடக்கிக் களையுங்கள் என்பதாம். விஷம் அளவின்றியேறுதலால் அளவின்றி விளைகின்ற பிறவிக்கு வமையாக்கப்பட்டது. வளவின்மை - நடுவுநிலைமை. திருந்தியசீர் - குற்றமற்ற சிறப்பு. ஈசன் திருநாமம் - திருவைந்தெழுத்து,

கயிலை.

39. வாயிலேவைக்குமளவின்மருந்தாகித்
தீயபிறவிநோய்தீர்க்குமே - தூயவே
கம்பெருமாதேவியொடுமன்னுகயிலாயத்
தெம்பெருமானோரஞ்செழுத்து.

இ - ள். தூய ஏகம்பர் உமாதேவியொடு - பரிசுத்தராகிய திருவேகம்பர் உமாதேவியுடன்கூடி, மன்னு - நிலைபெற்ற, கயிலாயத்து எம்பெருமான் - திருக்கயிலை யெம்பெருமானது, ஓர் அஞ்சு எழுத்து - ஒப்பற்ற ஸ்ரீ பஞ்சாக்ஷரம், வாயிலே வைக்குமளவில் - வாயில் வைத்தளவில், மருந்து ஆகி - ஔஷதமாகி, தீயபிறவி நோய்தீர்க்கும் - கொடிய பிறவிப்பிணியை நீக்கும், எ - று.

வாயில்வைத்தல் - வாயினுலுச்சரித்தல். வாயிலேவைக்குமளவின் மருந்தாகித் தீயபிறவி நோய்தீர்க்கும் என்றது - வாயில்வைத்து விழுங்கியுடம்பினூறினபிறகு பிணிதீர்க்கும் பிறமருந்துகளோடிதற்குள்ள வேற்றுமையும் இதனேற்றமுங் கூறியவாறு. "தூயவேகம்பெருமாதேவி" எனவும் பாடம். இதற்குப் பரிசுத்தமாகிய ஒப்பற்ற பெருமையுள்ள உமாதேவி என்றுரைக்க.

காளத்தி.

40. அஞ்செழுத்துக்கண்டீரருமறைகளாவனவு
மஞ்செழுத்துக்கற்கவணிதநாகு - நஞ்சவித்த
காளத்தியார்யார்க்குங்காண்டற்கரிதாய்ப்போய்
நீளத்தேநின்றநெறி,

இ - ள். அருமறைகள் ஆவனவும் - அரியவேதங்களாய் விரிந்திருப்பனவும், அஞ்சு எழுத்து - ஸ்ரீபஞ்சாக்ஷரமே, அஞ்சு எழுத்து கற்க - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைக் கற்கவே, நஞ்சு அவித்த - (பாற்கடலிற்றோன்றிய ஆலாகல)விஷத்தின் கொடுமையைத் தணித்தருளிய, காளத்தியார் - திருக்

காளத்திநாதர், யார்க்கும் காண்டற்கு அரிது ஆய்போய் - யாவருக்கும் காண்பதற் கருமையாகச்சென்று, நீளத்தே நின்றநெறி - நெடுந்தூரத்தில்நின்ற வழியும், அணித்து ஆகும் - சமீபித்ததாகும், எ - று.

வேதவிரிவெல்லாம் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின்பெருமையையே கூறுதலால் "அஞ்செழுத்துக்கண்டீ ரருமறைகளாவனவும்" என்றும், இதனைக்கற்றளவில் யார்க்குமரியனாகிய காளத்தியீசன் எளியனாய்ப் புலப்படுதலால், "யார்க்குங் காண்டற்கரிதாய்ப்போய் நீளத்தே நின்றநெறி அஞ்செழுத்துக்கற்க வணித்தாகும்" என்றும் கூறினார். நீளத்தே நின்றநெறியாவது - ஆருமறையு நீத்து நின்றநிலை, அன்றி முக்கரணங்களுக்கு மெட்டாதநிலை.

கயிலை.

41. நெறிவார்சடையாய்நிலையின்மைநீயொன்
றறியாய்கொலந்தோவயர்ந்தாள்-நெறியிற்
கனைத்தருவிதூங்குங்கயிலாயாநின்னை
நினைத்தருவிகண்சோரநின்று.

இ - ள். நெறிவார் சடையாய் - நெறிதலுடைய நீண்ட சடையையுடையவனே, நெறியில் கனைத்து அருவி தூங்கும் கயிலாய - வழிகளில் ஓலித்து அருவி ஆறுகள் ஒழுகுகின்ற திருக்கயிலாயமலையைஇடமாகவுடையவனே, நின்னை நினைத்துகண் அருவி சோரநின்று - தேவரீரை நினைத்து கண்ணீர் அருவியாருகப் பெருகநின்று, அயர்ந்தாள் -சோரந்தாள், அந்தோ- ஐயோ, நிலையின்மை- அவனது நிலையாமையை, (இறப்பை) அறியாய்கொல்- நீ அறிந்திலையோ, எ - று.

காளத்தி.

42. நின்றுமிருந்துங்கிடந்துநடந்தும்யா
மென்றுநினைந்தாலுமென்கொலோ - சென்றுதன்
றாள்வானவரிறைஞ்சுந்தண்சாரற்காளத்தி
யாள்வாரருளாதவாறு.

இ - ள். வானவர் - தேவர்கள், சென்று - வந்து, தன் தாள் இறைஞ்சும் - தன்திருவடியை வணங்குமிடமாகிய, தண்சாரல் காளத்தி ஆள்வார் - குளிர்ச்சியாகிய சாரலையுடைய திருக்காளத்தி மலையையாள்பவராகியசிவபெருமான், யாம் - நாம், நின்றும் - நின்றாயினும், இருந்தும் - இருந்தாயினும், கிடந்தும் - கிடந்தாயினும், நடந்தும் - நடந்தாயினும், என்றும் - எப்பொழுதும், நினைந்தாலும் - நினைத்தாலும், அருளாத ஆறுஎன்கொல் - அருள்புரியாத விதமென்னோ, எ - று.

"நின்று மிருந்துங்கிடந்து நடந்து நினை, யென்றுஞ் சிவன்றாளிணை" என்றார் பிறரும்.

கயிலை.

**43.** அருளாதவாறுண்டேயார்க்கேனுமாக
விருளார்கறைமிடற்றெம்மீசன் - பொருளாய்ந்த
மெய்ம்மையேயுன்னில்வியன்கயிலைமேயான்வந்
திம்மையேதீர்க்குமிடர்.

இ - ள். இருள் ஆர் கறைமிடறு - கருமைநிறைந்த நஞ்சுபொருந்திய திருமிடற்றையுடைய, எம் ஈசன் - எமது ஈசன், யார்க்கேனும் ஆக - யாருக்கேயாயினுமாக, அருளாத ஆறுஉண்டே - அருள் புரியாவாறு முளதோ, பொருள் ஆய்ந்த - (வேதாகமப்) பொருள்களை (ஐயந்திரிபுகளற) ஆராய்ந்ததனாலுண்டாகிய, மெய்ம்மையே உன்னில் - உண்மை ஞானத்தினால் நினைத்தால், வியன்கயிலை மேயான்வந்து-பெருமை யமைந்ததிருக்கயிலாயமலையின் கண்ணே பொருந்தி வாழ்வோனாகிய சிவபெருமான் எழுந்தருளி, இம்மையே - இப்பிறப்பிற்றானே, இடர்தீர்க்கும் - நமது பிறவித்துன்பங்களை யொழித்தருளுவன், எ - று.

திருக்கயிலையானது தேவர்கோன்தன்னிடத் தெழுந்தருளி நித்யவாசம் பண்ணுதற்கிடமாகிய பெரும்புண்ணியமுடைமையால் "வியன்கயிலை" என்றார்.

காளத்தி.

**44.** இடரீருமக்கோரிடநாடிக்கொண்டு
நடவீரோகாலத்தானுங்கள் - கடல்வாய்க்
கருப்பட்டோங்கொண்முகில்சேர்காளத்திகாண
வொருப்பட்டோங்கண்டுணர்ந்து.

இ - ள். நாங்கள் - யாங்கள், கடல்வாய் கருப்பட்டு ஓங்கு - கடலின்கண் படிந்து சூலாகி மேலெழுந்த, ஒள்முகில் சேர் - (உலகத்துக்கு) நன்மையைச் செய்கின்ற மேகங்கள் படிகின்ற, காளத்தி - திருக்காளத்திமலையை, காண - கண்டுய்ய, உணர்ந்து ஒருப்பட்டோம் - அறிந்து மனமொருப்பட்டோம், (ஆதலால்) இடரீர் - துன்பமுடையீரே, உமக்கு ஓர் இடம் நாடிக்கொண்டு - உமக்கு ஒப்பற்ற இடமொன்றைத்தேடிக்கொண்டு, காலத்தால் நடவீரோ - (செல்லவேண்டிய) காலத்திற் செல்லீர்களோ, எ - று.

ஒருப்படுதல் - ஒருமைப்படுதல், துணிதல் எனினுமாம். ஒண்மை - அழகு, ஒழுங்குஎனினுமாம். ஒண்முகில் சேர்காளத்தி என்றது அம்மலையின் உயர்வு கூறியவாறு. ஓரிடம் என்றது என்று மழியாத சிவபெருமானது திருவடிநிழலை. காலத்தால் என்றது விரைந்தென்றபடி.

கயிலை.

**45.** உணருங்காலொன்றையுருத்தெரியக்காட்டாய்
புணருங்காலாரமுதேபோலு - மிணரிற்
கனியவாஞ்சோலைக்கயிலாயமேயா
யினியவாங்காணின்னியல்பு.

**இ - ள்.** இணரின் - பூங்கொத்துக்களோடு, கனிய ஆம் - கனிகளையுமுடையனவாகிய, சோலை - சோலைகள் சூழ்ந்த, கயிலாயம் - திருக்கயிலாயத்தை, மேயாய் - உறைவிடமாகப் பொருந்தினவனே, உணருங்கால் - அறியுமிடத்து, ஒன்றை - (உன்) ஒப்பற்ற நிலையை, உருதெரிய காட்டாய் - உருவந்தோன்றக் காட்டமாட்டாய், புணருங்கால் - அடையுமிடத்து, ஆர் அமுதேபோலும் - அரிய அமிர்தத்தையே நிகர்த்திருக்கும், (ஆதலால்) நின் இயல்பு - உனது தன்மைகள், இனிய ஆம் - இனியனவாயிராநின்றன.

"உணர்ந்தார்க் குணர்வரியோன்" ஆதலால், "உணருங்காலொன்றை யுருத்தெரியக்காட்டாய்" என்றார். "உணருங்கால்" என்றது எதிரிட்டறியுமிடத்து என்றபடி, "புணருங்கால்" என்றது த்ரிபுடி நீங்கிச் சிவாநந்தத்தழுந்துதலை.

காளத்தி.

**46.** நின்னியல்பையாரேயறிவார்நினையுங்கான்
மன்னியசீர்க்காளத்திமன்னவனே - நின்னில்
வெளிப்படுவதேழுலகுமீண்டேயொருகா
லொளிப்பதுவுமானலுரை.

**இ - ள்.** மன்னிய - நிலைபெற்ற, சீர் - சிறப்பினையுடைய, காளத்தி மன்னவனே - திருக்காளத்தி வேந்தனே, ஏழ் உலகும் - ஏழுலகங்களும், நின்னில் - உன்னிடத்தினின்றும், வெளிப்படுவது - தோன்றுவதும், மீண்டே ஒருகால் - மீண்டுமொருகாலத்தில், ஒளிப்பதுவும் ஆனல் - ஒடுங்குவதுமானல், நினையுங்கால் - கருதுமிடத்து, நின் இயல்பை - உன்னியற்கையை, யாரோ அறிவார் - யாவரோ அறிய வல்லார், உரை - சொல்லாய் எ - று.

இயல்பு - பெருமை.

கயிலை.

**47.** உரையும்பொருளுமுடலுமுயிரும்
விரையுமலரும்போல்விம்மிப் - புரையின்றிச்
சென்றவாறோங்குந்திருக்கயிலையெம்பெருமா
னின்றவாறெங்குநிறைந்து.

இ - ள். ஓங்கும் திருக்கயிலை எம்பெருமான் - உயர்ந்த திருக்கயிலை எம்பெருமானே, உரையும் பொருளும் (போல்) - சொல்லும் பொருளும் போலவும், உடலும் உயிரும் போல் - உடம்பு முயிரும் போலவும், விரையும் மலரும்போல் - மணமும் மலரும்போலவும், புரைஇன்றிசென்ற ஆறு - குற்றமின்றி வியாபித்த வாறும், எங்கும் நிறைந்துநின்ற ஆறு - எவ்விடத்தும் நிறைந்து நிலைபெற்றிருந்த வாறும். (என்னவியப்பு) எ - று.

எங்கும் என்றது எல்லாப் பிரபஞ்சங்களிலும் என்றபடி. சொல்லின் கண் பொருள்நிறைந்து நிற்பதுபோலவும், உடம்பின்கண் உயிர் நிறைந்து நிற்பதுபோலவும், மலரின்கண் மணம்நிறைந்து நிற்பதுபோலவும் எல்லா வுலகங்களிலும் இறைவன் பரிபூர்ணமாக வியாபித்து நிற்றலால் இவ்வாறு கூறினர். புரை - உவமையெனினுமாம்.

காளத்தி.

48. நிறைந்தெங்குநீயேயாய்நின்றாலுமொன்றின்
மறைந்தைம்புலன்காணவாராய் - சிறந்த
கணியாருந்தண்சாரற்காளத்தியாள்வாய்
பணியாயாலென்முன்பரிசு.

இ - ள். சிறந்த - உயர்ந்த, கணி ஆரும் - வேங்கை மரங்கள் நிறைந்த, தண்சாரல் - குளிர்ச்சியாகிய சாரலையுடைய, காளத்தி ஆள்வாய் - திருக்காளத்தி மலையை யாள்பவனே, என்முன் - என்னெதிரே, பரிசு - உன் உண்மைத்தன்மையோடு, பணியாய் - காட்சிகொடா தொழிவையாயினும், எங்கும் நீயே நிறைந்தாய் நின்றாலும் - எவ்விடத்தும் நீயே நிறைந்து நின்றாலும், ஒன்றில் மறைந்து - ஒருபொருளில் ஒளித்து, ஐம்புலன் காணவாராய் - என் ஐம்புலன்களாலுங் காணும்படி எழுந்தருளாய். எ-று.

புலன் என்றது இவ்விடத்துப் பொறிகளை. ஒன்றில் மறைந்து என்றது சிலா தாரு முதலியவைகளுள் ஒன்றில் என்றவாறு.

கயிலை.

49. பரிசறியேன்பற்றிலேன்கற்றிலேன்முற்றுங்
கரியுரியான்பாதமேகண்டாய் - திரியும்
புரமாளச்செற்றவனேபொற்கயிலைமன்னும்
பரமாவடியேற்குப்பற்று.

இ - ள். திரியும்-(ஆகாயத்தில்) சஞ்சரிக்கிற, புரம் - முப்புரங்களும், மாள - அழியும்படி, செற்றவனே - செயித்தவனே, பொன்கயிலை மன்னும்- அழகிய கயிலாய மலையின் கண்ணே நிலைபெற்ற, பரமா - மேலோனே, பரிசு முற்றும் அறியேன் - உன்தன்மை முழுதும் அறிந்திலேன், பற்று முற்றும் இலேன் - பற்றுமுழுதும் இல்லாதேன், முற்றும் கற்றிலேன் -

(அறிவு நூல்களை) முழுதும் கற்றேனில்லை, (ஆயினும்) அடியேற்குபற்று - அடியேனுக்குப்பற்றுவது, கரி உரியாய் பாதமே-யானைத்தோலை யுடைமை யாகிய உன் திருவடியே. எ - று.

காளத்தி.

50. பற்றாவானெவ்வுயிர்க்குமெந்தைபசுபதியே
முற்றாவெண்டிங்கண்முளைசூடி - வற்றாவாங்
கங்கைசேர்செஞ்சடையான்காளத்தியுண்ணின்ற
மங்கைசேர்பாகத்துமன்.

இ - ள். எந்தை - எமது தந்தையும், பசுபதி - பசுபதியும், முற்றா வெள் திங்கள் முளைசூடி - முதிராத வெள்ளிய இளம்பிறையைத் தரித்த வனும், வற்றா ஆம் கங்கை சேர்செஞ்சடையான் - வற்றாத நீரினையுடைய கங்காநதி தங்கிய செவந்த சடையையுடையவனும், காளத்தி உள் நின்ற மங்கை சேர்பாகத்துமன்-திருக்காளத்தியில் நிலைபெற்றிருக்கிற உமாதேவி யை யிடப்பாகத்திலுடைய இறைவனுமாகிய சிவபெருமான், எவ்வுயிர்க் கும் - எல்லாவுயிர்களுக்கும், பற்று ஆவான் - பற்றாயிருப்பவன், எ - று.

பசுபதி - ஆன்மகோடிகளுக்குத் தலைவன்.

கயிலை.

51. மன்னுகயிலாயமாமுத்தமாணிக்கம்
பொன்னாரமாக்கொண்டுபூணாதே - யெந்நாளு
மின்செய்வார்செஞ்சடையாய்வெள்ளெலும்பு பூண்கின்ற
தென்செய்வானெந்தாயியம்பு.

இ - ள். மன்னு - நிலைபேறுடையவனே, கயிலாய - திருக்கயிலாய மலையையுடையவனே, எந்தாய் - எமதுதந்தையே, மின்செய்வார் செஞ் சடையாய்-ஒளிசெய்கின்ற நீண்ட செஞ்சடையை யுடையவனே, மாமுத் தம் மாணிக்கம் பொன்-அழகிய முத்து மாணிக்கம் பொன் என்னுமிவற்றை, ஆரம் ஆ கொண்டு பூணாதே - மாலையாகக்கொண்டு அணியாமல், எந்நா ளும் - எக்காலமும், வெள் எலும்பு பூண்கின்றது - வெண்மையாகிய எலு ம்புமாலைகளை யணிவது, என்செய்வான் - என்செய்யும் பொருட்டு, இய ம்பு - நீ சொல்வாய். எ - று.

நவரத்நங்களுள் முத்துச்சிறந்தமைபற்றி முற்கூறப்பட்டது.

காளத்தி.

52. இயம்பாய்மடநெஞ்சேயேனோர்பாலென்ன
பயம்பார்த்துப் பற்றுவானூற்றாய் - புயம்பாம்பா
லார்த்தானேகாளத்தியம்மானேயென்றென்றே
யேத்தாதே வாளாவிருந்து.

இ - ள். மடம் நெஞ்சே - அறியாமையையுடைய மனமே, புயம் பாம்பால் ஆர்த்தானே-திருத்தோள்களைப் பாம்புகளைக்கொண்டு கட்டினவனே, காளத்தி அம்மானே - திருக்காளத்தியி லெழுந்தருளியிருக்கிற எமதுதந்தையே, என்று என்று - என்றுபலமுறை புகழ்ந்து, ஏத்தாதே - துதியாமலே, வாளா இருந்து - சும்மாவிருந்து, ஏனோர்பால் - பிறதேவர்களிடத்தில், என்னபயம் பார்த்து - என்னபயன் இருப்பதாகக் கண்டு, பற்றுவான் உற்றாய் - (அவர்களைப்) பற்றத்தொடங்கினை, இயம்பாய் - சொல்லாய். எ - று,

எல்லாப்பயனையும் எளிதில் அருள்செய்யும் திருக்காளத்தி யிறைவனிருக்க, அவனை ஏத்தாதுவிட்டுப் பயனற்ற பிறதேவர்களைப் பற்றலால், "மடநெஞ்சே" எனத் தம்நெஞ்சையிழித்துக் கூறியவாறு.

கயிலை.

53. இருந்தவாகாணீரிதுவென்னமாய
மருந்தண்கயிலாயத்தண்ணல் - வருந்திப்போய்த்
தானாளும்பிச்சைபுகும்போலுந்தன்னடியார்
வானாளமண்ணாளவைத்து.

இ - ள். அருதண் கயிலாயத்து அண்ணல் - அருமையாகிய குளிர்ந்த கயிலாயகிரியினையுடைய பெரியோன், தன் அடியார் - தன்னடியார்கள், வான் ஆள மண் ஆள வைத்து - விண்ணுலகையாளவும் மண்ணுலகையாளவும் (அவர்களை) வைத்து, தான் - தான், நாளும்-நாள்தோறும், வருந்திபோய் - வருந்திச்சென்று, பிச்சைபுகும் - பலியேற்கப் புகுவான், இருந்த ஆறுகாணீர் - (இச்செய்தி) இருந்த விதத்தைப்பாருங்கள், இது என்னமாயம் - இது என்னமாயை. எ - று.

காளத்தி.

54. வைத்தவிருநிதியேயென்னுடையவாழ்முதலே
நித்திலமேகாளத்திநீள்சுடரே - மொய்த்தொளிசே
ரக்காலத்தாசையடிநாயேன்காணுங்கா
லெக்காலத்தெப்பிறவியான்.

இ - ள். வைத்த இருநிதியே - (எம்பொருட்டுச் சேமித்துவைத்த) பெரிய நிக்ஷேபமே, என்னுடைய வாழ்முதலே - என்னுயிர் வாழ்க்கைக்கு முதற்காரணமே, நித்திலமே - முத்தே, காளத்தி நீள்சுடரே - திருக்காளத்தியில் நிலைபெற்றிருக்கிற பரஞ்சோதியே, மொய்த்து ஒளிசேர - மிகுதியாகியமெய்ஞ்ஞான ஒளிபொருந்த, காலத்து-(காண்டற்குரிய) காலத்தில், ஆசை அடி - பொன்போலும் (உன்) திருவடியை, நாயேன் - நாயினேன், காணுங்கால் - காணுமிடத்து, எக்காலத்து எப்பிறவியான் - எக்காலத்தில் எந்தப்பிறவியை யுடையனாவேன். எ - று.

மெய்யறிவால் உன்திருவடியைத் தரிசித்த பிறகு எனக்கு எக்காலத்தும் பிறவிகளுளவாகா என்பதாம்.

கயிலை.

**55.** யானென்றுந்தானென்றிரண்டில்லையென்பதனை
யானென்றுங்கொண்டிருப்பனானலுந் - தேனுண்
டளிகடாம்பாடுமகன்கயிலைமேயான்
றெளிகொடான்மாயங்கள்செய்து.

இ - ள். யான் என்றும்தான் என்று - நான் என்றும் நீ என்றும், இரண்டு இல்லை என்பதனை - இரண்டில்லை யென்பதை, யான் என்றும் கொண்டு இருப்பன் ஆனாலும் - யான் எக்காலமும் கொண்டிருப்பேனாயினும், அளிகள் தாம் - வண்டுகள்தாம், தேன் உண்டு - பூந்தேனைப்பருகி, பாடும் - பாடுதற்குரிய, அகன்கயிலைமேயான் - விசாலமாகிய திருக்கயிலாயத்தி லெழுந்தருளி யிருப்பவனே, மாயங்கள்செய்து-மாயங்களைப்பண்ணி, தெளிகொடான் - தெளிவை யருள்செய்யான். எ - று.

காளத்தி.

**56.** மாயங்கள்செய்தைவர்சொன்னவழிநின்று
காயங்கொண்டாடல்கணக்கன்று - காயமே
நிற்பதன்றாதலாற்காளத்திநின்மலன்சீர்
கற்பதேகண்டீர்கணக்கு.

இ - ள். மாயங்கள் செய்து - தீமைகளைச்செய்து, ஐவர் சொன்ன வழிநின்று - ஐவர்சொன்னவழியிலே நின்று, காயம் கொண்டாடல் - உடம்பையே பாராட்டுதல், கணக்கு அன்று - நல்வழக்கன்று, காயம் நிற்பது அன்று ஆதலால் - உடம்பு நிலைத்திருப்பது அன்றாதலால், காளத்தி நின்மலன்சீர் - திருக்காளத்தியி லெழுந்தருளியிருக்கிற நிர்மலனாகிய சிவ பெருமானது பெருமையை, கற்பதே கணக்கு - கற்றலேநல்வழக்கு, எ - று.

மாயம் - பொய்த்தொழில்கள் எனினுமாம். ஐவர் - பஞ்சேந்திரியங்கள். அவைசொன்னவழி நிற்றலாவது - அவை செல்லும்வழியே சென்று விடயங்களி லழுந்திநிற்றல். கணக்கு - நன்னெறியுமாம். நின்மலன் - மல விமுக்தன்.

கயிலை.

**57.** கணக்கிட்டுக்கொண்டிருந்துகாலனார்நம்மை
வணக்கிலலைப்படாமுன்னம் - பிணக்கின்றிக்
காலத்தானெஞ்சேகயிலாயமேவியகற்
சூலத்தான்பாதந்தொழு.

இ - ள். காலனார் - கூற்றுவனார், கணக்கிட்டுக்கொண்டிருந்து (நம்வாழ்நாளை) எண்ணிக்கொண்டேயிருந்து (அதுமுடிந்தவுடன்), நம்மை - நம்மை, வணக்கில்அலைப்படாமுன்னம் - அடக்குதலால் யாம்துன்பப்படு தற்குமுன்பே, நெஞ்சே - மனமே, பிணக்குஇன்றி - மாறுபாடில்லாமல், காலத்தால் - காலமுண்டாகச்செய்தே, கயிலாயம்மேவிய - திருக்கயிலாய த்திலெழுந்தருளி யிருக்கிற, சூலத்தான் - சூலாயுதத்தையுடைய சிவபெரு மானது, நல்பாதம் - நன்மையைத்தருகின்ற திருவடியை, தொழு - வணங்கு, எ - று.

நல்பாதம் எனஇயையும். நல்பாதம் என்றதுதம் அன்பர்பிறவிக்கடலைக்கடந்து முத்திக்கரையையடைய மரக்கலமாயிருத்தலாகியநன்மையுள்ள பாதம் என்றபடி. இது, "கற்றதனாலாயபயனென்கொல் வாலறிவன்-நற்றாடொழாஅரெனின்" என்பதனால்விசதம்.

காளத்தி.

58. தொழுவாள்பெறுளேதன்றோள்வளையுந்தோற்றாண்
மழுவாளன்காளத்திவாழ்த்தி - யெழுவா
ணறுமாமலர்க்கொன்றைநம்முன்னேநாளைப்
பெறுமாறுகாணீரென்பெண்.

இ - ள். என்பெண் - என்பெண்ணானவள், மழுவாளன் காளத்தி வாழ்த்தி - மழுவாயுதத்தை யுடையவனாகிய சிவபெருமானதுதிருக்காளத்தியைத்துதித்து, தன்தோள்வளையும்தோற்றாள் - தன்கைவளையையும் இழந்தவளாகின்று, தொழுவாள் - வணங்காநின்றாள், எழுவாள் - எழாநின்றாள், பெறுளே - (மீட்டும் அதனைப்) பெறுளோ, (அவ்விழந்தவளையைப் பெறுதலேயன்றி) நாளை - நாளையே, நம்முன்னே - எம்கண்ணுக்கெதிரில், நறுமாமலர்க்கொன்றை - நறுமணமுள்ள கொன்றை மலர்மாலையை, பெறும் ஆறு காணீர் - பெறும்விதத்தைப்பாருங்கள், எ - று.

இதுதாய்க்கூற்று. என்பெண்ணானவள் திருக்காளத்தி நாதனைத்தொழுவாளாயெழுந்து தன்றோள்வளையையுந்தோற்றாள், ஆயினும் நாளையேஅத்தோள்வளையேயன்றி அவனது கொன்றைமலர் மாலையையும் நம்முன்னே பெறுவாளென்பதாம்.

கயிலை.

59. பெண்ணின்றயலார்முன்பேதைபிறைசூடி
கண்ணின்றநெற்றிக்கயிலைக்கோ - னுண்ணின்ற
காமந்தான்மீதூரநைவாட்குன்கார்க்கொன்றைத்
தாமந்தாமற்றிவளைச்சார்ந்து.

இ - ள். பிறைசூடி - பிறையை யணிந்தவனே, கண் நின்றநெற்றி கயிலைக்கோன் - கண்நிலைபெற்ற நெற்றியையுடைய திருக்கயிலைவேந்தனே, இன்று - இப்பொழுது, பேதைபெண் -என்பேதைப் பெண்ணானவள், அயலார்முன் - அயலாருக் கெதிரே, உள்நின்ற காமந்தான்மீதூர நைவாட்கு - தன்மனத்தின் கண்ணதாகிய காமம் அதிகரிக்க நைபவள் பொருட்டு, இவளைச்சார்ந்து - இவளைக்கூடி, உன்கார்கொன்றைத்தாமம்தா - உனது பெருமையுள்ள கொன்றைமலர்மாலையைத் தந்தருள், எ - று.

பிறைசூடி, கயிலைக்கோன் என்பன அண்மைவிளியாதலால் இயல்பு. இதுவும் தாய்க்கூற்று.

காளத்தி.

**60.** சார்ந்தாரையெவ்விடத்துங்காப்பனவுஞ்சார்ந்தன்பு
கூர்ந்தார்க்குமுத்திகொடுப்பனவும் - கூர்ந்துள்ளே
மூளத்தியானிப்பார்முன்வந்துநிற்பனவுங்
காளத்தியார்தங்கழல்.

இ - ள். சார்ந்தாரை - அடைந்தவரை, எவ்விடத்தும் காப்பனவும் - எவ்விடத்திலுங் காத்தருள்வனவும், சார்ந்து அன்பு கூர்ந்தார்க்கு - அடைந்து அன்பு மிகுந்தவர்க்கு, முத்திகொடுப்பனவும்-மோட்சத்தைத் தந்தருள்வனவும், கூர்ந்து உள்ளே மூள தியானிப்பார் முன்வந்துநிற்பனவும் - மிகுதியாய் மனத்தின் கண்ணே பற்றும்படி தியானிப்பவர்களுக்கெதிரில் வந்து நின்றருள்வனவும், காளத்தியார்தம்கழல் - திருக்காளத்தியை யுடையவராகிய சிவபெருமானது திருவடிகளே. எ - று.

கயிலை.

**61.** தங்கழல்களார்ப்பவிளக்குச்சலன்சலனென்
றங்கழல்களார்ப்பவனலேந்திப் - பொங்ககலத்
தார்த்தாடரவமகன்கயிலைமேயாய்நீ
கூத்தாடன்மேவியவாகூறு.

இ - ள். அகன் கயிலைமேயாய் - இடமகன்றதிருக்கயிலையி லெழுந்தருளினவனே, தம்கழல்கள் ஆர்ப்ப - உமதுதிருக்கழல்கள் ஒலிசெய்யவும், விளக்குச்சலன் சலன்என்று - விளக்குச்சுடர்போலச் சலன்சலனென்று, அங்குஅழல்கள் ஆர்ப்ப - அவ்விடத்து நெருப்பானது ஒலிக்கவும், அனல் ஏந்தி - (திருக்கரத்தில்) நெருப்பையேந்திக் கொண்டு, பொங்கு அகலத்து-விளங்குகின்றதிருமார்பில், ஆடுஅரவம் ஆர்த்து - படமெடுத்தாடுகின்ற பாம்பை ஒன்றோடொன்று பொருத்தி ஆரமாகப் பூண்டு, நீ கூத்தாடல்மேவியஆறு - நீ கூத்தாடுதலைப் பொருந்தியவாற்றை, கூறு - சொல்லியருளவேண்டும், எ - று.

இவ்வாறு நீ கூத்தாடுகைக்குக் காரணங் கூறவேண்டுமென்பதாம்.

காளத்தி.

62. கூறாய்நின்பொன்வாயாற்கோலச்சிறுகிளியே
வேறாகவந்திருந்துமெல்லெனவே - நீறாவு
மஞ்சடையுநீள்குடுமிவாளருவிக்காளத்திச்
செஞ்சடையெம்மீசன்றிறம்.

இ - ள். கோலச்சிறுகிளியே - அழகாகிய சிறுகிள்ளையே, நீல்தாவும் மஞ்சுஅடையும் - நீலநிறமுள்ளமேகங்கள் வந்துபடிகின்ற, நீள்குடுமி - நீண்டசிகரங்களையுடைய, வாள் - ஒளியுள்ள, அருவி - அருவி யாறுகள் பெருகுகின்ற, காளத்தி - திருக்காளத்தியிலெழுந்தருளியிருக்கிற, செஞ் சடை - செவந்தசடாபாரத்தையுடைய, எம் ஈசன் திறம் - எம்மீசனதுமங் களகுணங்களை, வேறாகவந்திருந்து - வேறாய்வந்திருந்து, மெல்லென - மைய, நின்பொன்வாயால் கூறாய் - உன் அழகிய வாயினாற்சொல்லாய்.
வேறாக என்றது - உன்கூட்டத்தினின்றும் பிரிந்து என்றபடி.

கயிலை.

63. ஈசன்றிறமேநினைந்துருகுமெம்மைப்போன்
மாசினிறத்தமடக்குருகே - கூசி
யிருத்தியானீயுமிருங்கயிலைமேயாற்
கருத்தியாய்க்காமுற்றாயாம்.

இ - ள். மாசு இல் நிறத்த - குற்றமில்லாதநிறத்தையுடைய, மடக்கு ருகே - இளமையாகிய நாரையே, ஈசன்திறமே - ஈசனது மங்களகுணங்க ளையே, நினைந்து உருகும் - நினைந்துருகின்ற, எம்மைப்போல் - எங்களைப் போல, கூசிஇருத்தி - ஒடுங்கியிருக்கிறாய், (ஆதலால்) நீயும் - (எம்மைப் போல) நீயும், இருகயிலைமேயாற்கு - பெரியகயிலாய மலையில் எழுந்தருளி யிருப்பவராகிய சிவபெருமானுக்கு, அருத்தியாய் காமுற்றாய் ஆம் - ஆசை யாகி மையல்கொண்டனையாதல் வேண்டும்; எ - று.
ஆல் - அசை. இது தலைவிகூற்று. குருகொடுகூறியிரங்கல்.

காளத்தி.

64. காமுற்றாயாமன்றேகாளத்தியான்கழற்கே
யாமுற்றதுற்றாயிருங்கடலே - யாமத்து
ஞாலத்துயிரெல்லாங்கண்டுஞ்சுநள்ளிருள்கூர்
காலத்துந்துஞ்சாதுன்கண்.

இ - ள். இருகடலே - பெரியகடலே, யாமத்து - இரவில், ஞாலத் து உயிர்எல்லாம் - உலகிலுள்ள எல்லாவுயிர்களும், கண் துஞ்சும் - கண்ணுற ங்குகின்ற, நள்இருள்கூர் காலத்தும் - நெருங்கிய இருள் மிகுகின்ற காலத் திலும், உன்கண் துஞ்சாது - உன்கண்ணுறங்காது, யாம் உற்றது உற்றாய் -

யாம்அடைந்த நிலைமையநீயும் அடைந்திருக்கின்றனை, (ஆதலால்) காளத்தியான் கழற்கே - திருக்காளத்தி எம்பெருமான் திருவடிக்கே, காமுற்றாய் ஆம் - மையல்கொண்டனை யாதல் வேண்டும் எ - று.

இதுவுந்தலைவிகூற்று. கடலொடுகூறியிரங்கல்.

கயிலை.

65. கண்ணுங்கருத்துங்கயிலாயரேயெமக்கென்
றெண்ணியிருப்பன்யானெப்பொழுது - நண்ணும்
பொறியாடரவசைத்தபூதப்படையா
ரறியார்கொனெஞ்சேயவர்.

இ - ள். நெஞ்சே - மனமே, எமக்கு கண்ணும் கருத்தும் கயிலாயரேஎன்று - எமக்குக் கண்ணுங் கருத்துமாயிருப்பவர் திருக்கயிலாய நாதரேயாமென்று, யான் எப்பொழுதும் எண்ணியிருப்பன் - நான் எக்காலத்தும் நினைத்திருப்பேன், (இதனை) நண்ணும்பொறி - புள்ளிகள் பொருந்திய, ஆடுஅரவு அசைத்த - (படமெடுத்து) ஆடுகின்ற பாம்பைத்திருவரை திருக்கரமுதலிய இடங்களில் கட்டின, பூதப்படையார் அவர் - பூதப்படையையுடையவராகிய அந்தச்சிவபெருமானவர், அறியார்கொல் - அறிந்திலரோ, எ - று.

காட்சிப்பொருள் கருத்துப்பொருள் முதலியயாவும் இறைவனுருவமேயாதலால் "கண்ணுங் கருத்துங்கயிலாயரே" என்றும், இங்ஙனமிருப்பதொன்றுணர்ந்த பின்னர் அவனையிடையறாதெண்ணியிருத்தலே தகுதியாதலால், "யானெப்பொழுதுமெண்ணியிருப்பன்" என்றும், "முற்றறிவனாதலால், "அறியார்கொல்" என்றுங்கூறினர். அசைத்தல் - கட்டல். அதாவது திருவரை திருக்கரமுதலியஇடங்களில் கச்சை கங்கணம் முதலியவாகக் கட்டுதல்.

காளத்தி.

66. நெஞ்சேயவர்கண்டாய்நேரோநினைவாரை
யஞ்சேலென்றாட்கொண்டருள்செய்வார் - நஞ்சேயுங்
கண்டத்தார்காளத்தியாள்வார்கழல்கண்டீ
ரண்டத்தார்சூடுமலர்.

இ - ள். நெஞ்சே - மனமே, நேரோநினைவாரை-(தம்மைச்) செவ்வேநினைய வல்லாரை, அஞ்சேல்என்று ஆட்கொண்டு - அஞ்சவேண்டாமென்று அடிமைகொண்டு, அருள்செய்வார் - அருள்புரிபவர், அவர் - அந்தச்சிவபெருமானே, அண்டத்தார் - விண்ணுலகிலுள்ள தேவர்கள், சூடும் - சிரசிலணிகின்ற, அலர் - மலராவது, நஞ்சு ஐயும்கண்டத்தார் - நஞ்சக்கறைபொருந்திய திருமிடற்றையுடையவர், காளத்திஆள்வார் - திருக்காளத்தியாள்வார், (அவரது) கழல் - திருவடியே, எ - று.

தம்மை நினைவாரைக் காத்தருள் பவரும், தமது திருவடியைத் தேவர்கள் மலர்போலச் சிரத்திற் சூட்டிக்கொள்ளுதற்குரிய பெருமையுடையவருமாயிருக்கையால்,மனமே, திருக்காளத்தியாள்வாரையாமும் நினைத்துய்யவேண்டுமென்பதாம்.

கயிலை.

67. அலரோனெடுமாலமரர்கோன்மற்றும்
பலராய்ப்படைத்துக்காத்தாண்டு - புலர்காலத்
தொன்றாகிமீண்டுபலவாகிநிற்கின்றான்
குன்றாதசீர்க்கயிலைக்கோ.

இ - ள். குன்றாத - என்றுமழியாத, சீர் - சிறப்பமைந்த, கயிலைக்கோ - திருக்கயிலையி லெழுந்தருளியிருக்கிற இறைவன், அலரோன் - தாமரைமலரையுடையவனாகிய பிரமன், நெடுமால் - விட்டுணு, அமரர்கோன்- தேவர்க்கரசனாகிய இந்திரன், மற்றும் பலராய் - மற்றும் பலபெயருள்ளவராக, படைத்து - சிருஷ்டித்து, காத்தாண்டு - ரக்ஷித்தருளி, புலர் காலத்து - முடியுங்காலத்தில், ஒன்று ஆகி - ஒருருவாகி, மீண்டு பல ஆகி நிற்கின்றான் - மீண்டும் பல வுருவங்களாய்த்தோன்றி நிலைபெற்றிருக்கின்றான், எ - று.

அலரோன்முதலிய யாவரையும் படைத்துக்காத்து அழிக்கவல்லவன் தான் என்றுங் குன்றாவியல்பெருஞ் சிறப்பினனாதல் வேண்டுமாதலால் "குன்றாதசீர்க் கயிலைக்கோ" என்றார். பிரமன்முதலிய எல்லாப்பொருள்களும் திருக்கயிலை நாதனிடத்துத்தோன்றி நின்றழிகின்றன என்பதாம்.

காளத்தி.

68. கோத்தமலர்வாளிகொண்டனங்கன்காளத்திக்
கூத்தன்மேலன்றுகுறித்தெய்யப் - பார்த்தலுமே
பண்பொழியாக்கோபத்தீச்சுற்றுதலும்பற்றற்று
வெண்பொடியாய்வீழ்ந்திலனோவெந்து.

இ - ள். அநங்கன் - மந்மதன், கோத்த -(தன்மலர்வில்லில்) தொடுத்த, மலர்வாளிகொண்டு - புஷ்பபாணங்களைக்கொண்டு, அன்று - அந்நாளில், காளத்திகூத்தன்மேல் - திருக்காளத்திக்கூத்தன்மீது, குறித்து எய்ய- இலக்குவைத்தெய்ய, பார்த்தலுமே - (இறைவன்) நோக்குதலும், பண்பு ஒழியா - குணம்நீங்காத, கோபத்தீ சுற்றுதலும் - கோபாக்கினிசூழ்ந்தளவில், (அந்த மந்மதன்) பற்று அற்று - (தான்பிழைத்துக்கோடற்குரிய ஓர்) ஆதாரமற்று, வெந்துவெண்பொடி ஆய்வீழ்ந்திலனோ-வெந்துசாம்பலாய் வீழ்ந்தானல்லனோ, எ - று.

அநங்கன் - உடம்பில்லாதவன். கூத்தன் - பொதுநடஞ்செய்வோன். பண்பு - குணம். "நிறைமொழிமாந்தர்" என்ற இடத்து, "நிறைமொழி" என்பதற்குப்பயனிறைந்த சொல் எனக்கொண்டாற்போல, கோபத்தீயின் பண்பாகிய நீறுக்குதல் இவ்விடத்துப் பயனாகக்கொள்க.

கயிலை.

69. வெந்திறல்வேற்பார்த்தற்கருள்செய்வான்வேண்டியோர்
செந்தறுகட்கேழற்றிறம்புரிந்து - வந்தருளுங்
கானவனாங்கோலமியான்காணக்கயிலாய
வானவர்தங்கோமானேவா.

இ - ள். கயிலாயம் - திருக்கயிலாயத்தி லெழுந்தருளியிருக்கிற, வானவர் தம்கோமானே - தேவர்பெருமானே, வெம்திறல்வேல் - வெவ்விய வலியமைந்த வேற்படையையுடைய, பார்த்தற்கு - அருச்சுனனுக்கு, அருள்செய்வான்வேண்டி - அருள்செய்யவிரும்பி, ஓர்செம்தறுகண்கேழல்- ஒருசெவந்த அஞ்சாமையையுடைய பன்றியின், திறம்புரிந்து - (விஷயத்தைக்) காரணமாகச் செய்துகொண்டு, வந்தருளும் - நீவந்தருளிய, கானவன் ஆம் கோலம் - வேடனாகிய திருக்கோலத்தை, யான்காண - நான்கண்டுய்ய, வா - எழுந்தருளவேண்டும், எ - று.

காளத்தி.

70. வாமான்றேர்வல்லவயப்போர்விசயனைப்போற்
றுமாருலகிற்றவமுடையார் - தாமியார்க்குங்
காண்டற்கரியராங்காளத்தியாள்வாரைத்
தீண்டத்தாம்பெற்றமையாற்சென்று.

இ - ள். தாம்யார்க்கும் காண்டற்கு அரியர் ஆம் - தாம் எவர்க்கும் காணுதற்கருமையானவராகிய, காளத்தி ஆள்வாரை - திருக்காளத்தியாள்வாரை, சென்று தீண்டபெற்றமையால் - சென்று தொடப்பெற்றமையால், வாமான் தேர்வல்ல - தாவிச்செல்லுங் குதிரைகள்பூண்ட தேர் நடத்துதலில்வல்ல, வயம்போர் - வெற்றியையுடைய போர்த்தொழில்மைந்த, விசயனைப்போல் - அருச்சுனனைப்போல, உலகில்-இவ்வுலகத்தில், தவம்உடையார் ஆர் - தவப்பேறுடையவர் யாவர், (ஒருவருமில்லை) எ - று.

கயிலை.

71. சென்றிறைஞ்சும்வானோர்தஞ்சிந்தைக்குஞ்சேயரா
யென்றுமடியார்க்குமுன்னிற்பர் - நன்று
கனியவாஞ்சோலைக்கயிலாயமேயா
ரினியவாபத்தர்க்கிவர்.

இ - ள். சென்று இறைஞ்சும் - (தாமிருக்கு மிடந்தேடிப்போய்) வணங்குகின்ற, வானோர் தம்சிந்தைக்கு - தேவர்களுடைய மனத்துக்கும், சேயர் ஆய் - தூரத்தராகி, என்றும் - எக்காலத்தும், அடியார்க்கு முன் - (தம்) அடியவர்க்கெதிரில், நிற்பர் - (அவரிருக்குமிடத்தி லெழுந்தருளி பிரத்யக்ஷமாகி) நிற்பர், (ஆதலால்) நன்று-இனியவாகிய, கனிய ஆம்-கனி களைத் தருவனவாகிய, சோலை - சோலைகள்சூழ்ந்த, கயிலாயம்மேயார் இவர் - திருக்கயிலாயத்தி லெழுந்தருளியிருக்கின்ற இவர், பத்தர்க்கு இனி யவா - தம் அடியார்க்கு இனியரானவாறென்னை, எ - று.

தேவர்களுடைய கண்ணுக்கே யன்றி மனத்துக்கு மெட்டாதவராயி னும் அடியார் மனத்துக்கே யன்றிக் கண்ணுக்கும் புலப்படுவோராதலால் இந்தத் திருக்கயிலாயநாதர் அடியார்க்கினியவர் என்பதாம்.

காளத்தி.

72. இவரோமுதற்றேவரெல்லார்க்குமிக்கா
ரிவரல்லரென்றிருக்கவேண்டாங் - கவலாதே
காதலித்தின்றேத்துதிரேற்காளத்தியாள்வார்நீ
ராதரித்ததெய்வமேயாம்.

இ - ள். எல்லார்க்கும் - எல்லாத்தேவர்களுக்கும், இவரோ முதல் தேவர் - இவரோ முதற்கடவுளர், (எல்லார்க்கும்) மிக்கார் (இவரோ)-எல்லார் க்கும் மேலானவரும் இவரோ, இவர் அல்லர் என்று இருக்கவேண்டாம் - (எல்லார்க்கும் முதற்கடவுளும் மேலானவரும்) இவரல்லரென்று கருதி யிருக்கவேண்டாம், கவலாதே - வருந்தாமல், இன்று - இப்பொழுது, காத லித்து - விரும்பி, ஏத்துதிரேல் - துதிப்பீராயின், காளத்திஆள்வார்-திருக் காளத்தியாள்வார், நீர் ஆதரித்ததெய்வமே ஆம் - நீங்கள்விரும்பின தெய் வமே யாவர், எ - று.

இறைவன் விரும்புவார் விரும்பும் வண்ணம் வெளிப்பட்டுப் பய னளிப்போனாதலால், "காளத்தியாள்வார் நீ ராதரித்த தெய்வமேயாம்" என்றார்.

கயிலை.

73. ஆமென்றுநாளையுளவென்றும்வாழ்விலே
தாமின்றுவீழ்கைதவமன்று - யாமென்று
மிம்மாயவாழ்வினையேபேணுதிருங்கயிலை
யம்மானைச்சேர்வதறிவு.

இ - ள். ஆம் என்றும் - (நமக்கு இனிமை) ஆமென்றும், நாளை உள என்றும் - நாளை நமக்குள்ளன என்றும், வாழ்விலே - (இந்தப்பிரபஞ்ச) வாழ்க்கையில், இன்றுவீழ்கை - இப்பொழுது வீழ்ந்தழுந்துதல், தவம் அன்று-தவமல்ல, யாம் என்றும் - நாம் எப்பொழுதும், இம்மாயவாழ்வினை

யே பேணாது - இந்தப்பொய்வாழ்வையேவிரும்பாமல், இருகயிலை - பெரிய திருக்கயிலாயத்தி லெழுந்தருளியிருக்கிற, அம்மானை - எமது தந்தையாகிய சிவபெருமானை, சேர்வது-அடைவதே, அறிவு - பேரறிவாவது, எ-று,

காளத்தி.

74. அறியாமலேனுமறிந்தேனுஞ்செய்து
செறிகின்றதீவினைகளெல்லா - நெறிநின்று
நன்முகில்சேர்காளத்திநாதனடிபணிந்து
பொன்முகரியாடுதலும்போம்.

இ - ள். நெறிநின்று - நன்னெறியில் நின்று, நல்முகில்சேர்-(உலகத்திற்கு) நன்மையாகிய மேகங்கள்படிகின்ற, காளத்தி - திருக்காளத்தியிலெழுந்தருளியிருக்கிற, நாதன் - இறைவனது, அடி - திருவடியை, பணிந்து - வணங்கி, பொன்முகரி ஆடுதலும்-பொன்முகரியாற்றில் மூழ்குதலும், அறியாமலேனும் - அறியாமலாயினும், அறிந்தேனும் - அறிந்தாயினும், செய்து - (நம்மால்) செய்யப்பட்டு, செறிகின்ற - மிகுகின்ற, தீவினைகள் எல்லாம் - பாவங்களெல்லாம், போம் - கழிந்தொழியும், எ - று.

தீவினைகள் அவற்றின் பயனாகிய பாவங்களுக்காயின. செறிகின்ற - நெருங்குகின்ற எனினுமாம்.

கயிலை.

75. போகின்றமாமுகிலேபொற்கயிலைவெற்பளவு
மேகின்றெமக்காகவெம்பெருமா - னேகினு
லுண்ணப்படாநஞ்சமுண்டாற்கென்னுள்ளுறுநோய்
விண்ணப்பஞ்செய்கண்டாய்வேறு.

இ - ள். போகின்ற மாமுகிலே - (ஆகாயத்தில்) செல்லாநின்ற அழகிய மேகமே, இன்று - இப்பொழுது, எம்பெருமான் பொன்கயிலை வெற்பு அளவும்-எப்பெருமானது அழகியதிருக்கயிலை மலையளவும், எமக்காக ஏகு- எங்கள்பொருட்டுச் செல்லவேண்டும், ஏகினுல் - சென்றால், உண்ணப்படா நஞ்சம் உண்டாற்கு - (ஒருவராலும்) பருகவொண்ணாத நஞ்சத்தைப்பருகின சிவபெருமானுக்கு, என் உள் உறும்நோய் - என்மனத்தில் மிகாநின்ற விரகநோயின்றன்மையை, வேறு - தனியேயிருந்து, விண்ணப்பம்செய் - விண்ணப்பம் பண்ணக்கடவை, எ - று.

வேறு என்றது - உமாதேவிமுதலானோர் அறியாவகை தனித்திருந்து என்றபடி. இதற்கு முன்னெல்லாம் சிறிதுதூரஞ்சென்று மீளுவீராயினும் இன்று எம்பொருட்டுத் திருக்கயிலைமலையளவுஞ் சென்று இறைவனுக்கு என்னுள்ளத்ததாகிய காமநோயினது நிலைமையை விண்ணப்பஞ்செய்ய வேண்டுமென்பதாம். இதுமேகவிடுதூது. தலைவிகூற்று.

காளத்தி.

76. வேறேயுங்காக்கத்தகுவேனைமெல்லியலாள்
கூறேயுங்காளத்திக்கொற்றவனே - யேறேறு
மன்பாவடியேற்கருளாதொழிகின்ற
தென்பாவமேயன்றோவின்று.

இ - ள். ஐமெல் இயலாள் - அழகிய மெல்லியலையுடையவளாகிய உமாதேவி, கூறு ஏயும் - (ஒரு) பாகத்திற் பொருந்தப்பெற்ற, காளத்திகொற்றவனே - திருக்காளத்தி வேந்தனே, ஏறு ஏறும் அன்பா - இடபத்தின் மீதேறுகின்ற (அன்பர்க்கு) அன்பனே, வேறேயும் காக்கத்தகுவேன் - வேறிடத்தில் வைத்தாயினும் காக்கத்தகுதியுடையேனாகிய, அடியேற்கு - அடியேனுக்கு, அருளாது ஒழிகின்றது - நீ அருளாதொழிதற்குக் காரணம், இன்று - இப்பொழுது, என்பாவமே அன்றே - என்பாவமேயல்லவா, எ - று.

சிரத்திலும் இடப்பாகத்திலும் மாதரிருவரமர்ந்திருத்தலால், வேறேயும் என்றது, வலப்பாகத்திலாயினும் என்றபடி. "நன்னக்கனியை மதிவேணியணிந்த நாம்பயந்த, சின்னக்கனியை வலத்தில்வைத்தால் வருந்தீங்கென்னையே" என்றார் பிறரும். இதுவும் தலைவிகூற்று.

கயிலை.

77. இன்றுதொடங்கிப்பணிசெய்வேன்யானுனக்
கென்றுமிளமதியேயெம்பெருமா - னென்றுமென்
னுட்காதலுண்மையுயர்கயிலைமேயாற்குத்
திட்காதேவிண்ணப்பஞ்செய்.

இ - ள். இளமதியே - இளஞ்சந்திரனே, யான் - நான், இன்று தொடங்கி - இன்றுதொட்டு, என்றும் - எக்காலத்தும், உனக்கு பணிசெய்வேன் - உனக்கு ஏவற்றொழில்செய்வேன், எம்பெருமான் - எம்பெருமானாகிய, உயர் கயிலைமேயாற்கு - உயர்ந்த திருக்கயிலையி லெழுந்தருளியிருப்பவன் கண்ணே, என்றும் என் உள்காதல் உண்மை - எப்பொழுதும் என் மனத்தில் ஆசையுண்மையை, திட்காதே விண்ணப்பம்செய் - அஞ்சாமல் விண்ணப்பம்பண்ணக்கடவை, எ - று.

இளமதி - பிறை. இதுவும் தலைவிகூற்று. பிறையையிரத்தல்.

காளத்தி.

78. செய்யசடைமுடியென்செல்வனையான்கண்டெனது
கையறவுமுண்மெலிவும்யான்காட்டப் - பையவே,
காரேறுபூஞ்சோலைக் காளத்தியாள்வார்தம்
போரேறேயித்தெருவேபோது.

இ - ள். கார் ஏறு பூசோலை - மேகங்களேறித்தவழ்கின்ற மலர்ச்சோலைகள் நெருங்கிய, காளத்தி ஆள்வார்தம் - திருக்காளத்தியாள்வாரது, போர் ஏறே - போரில்வல்ல இடபமே, செய்யசடைமுடி - செவந்த சடாமகுடத்தையுடைய, என்செல்வனை - என்சீமானை, யான்கண்டு - நான்பார்த்து, எனதுகையறவும் உள்மெலிவும் - என் துன்பத்தையும்மனமெலிவையும், யான்காட்ட - நான்சொல்லிக் காட்டிக்கொள்ளும்படி, இத்தெருவே - இந்தத் தெருவின்கண்ணே, பையவேபோது - மெல்லெனவே செல்வாயாக, எ - று.

செல்வன் - செல்வமாயிருப்பவன் எனினுமாம். இது இடபத்தையிரத்தல். இதுவும் தலைமகள்கூற்று.

கயிலை.

79. போதுநெறியெனவேபேசிநின்பொன்வாயா
லூதத்தருவனொளிவண்டே - காதலாற்
கண்டார்வணங்குங்கயிலாயத்தெம்பெருமான்
வண்டார்மோந்தென்குழற்கேவா.

இ-ள். ஒளிவண்டே - ஒளியையுடையவண்டே, போதுநெறிஎனவேபேசி - பேரரும்புகளை நெறியென்றுசொல்லி, நின்பொன்வாயால்-உன் அழகியவாயினால், ஊத - ஊதும்படி, தருவன் - இடந்தருவேன், காதலால் கண்டார்வணங்கும் - ஆசையோடுகண்டவர் பணிகின்ற, கயிலாயத்து எம் பெருமான் - திருக்கயிலாயத் தெம்பெருமானது, வள்தார்மோந்து - வளவியகொன்றைமலர்மாலையை மோந்து, என்குழற்கேவா - என்கூந்தலின்கண்ணே வருவாயாக, எ - று.

நெறித்தல் - துவைத்தல். நெறிபோது-வழியேவா எனினுமாம். இது வண்டையிரத்தல். தலைமகள்கூற்று.

காளத்தி.

80. வாவாமணிவாயான்மாவின்றளிர்கோதிக்
கூவாதிருந்தகுயிற்பிள்ளா - யோவாதே
பூமாம்பொழிலுடுத்த பொன்மதில்சூழ் காளத்திக்
கோமான்வரவொருகாற்கூவு.

இ - ள். மணிவாயால் - அழகியவாயினால், மாவின்தளிர்கோதி-மாந்தளிரைக்கோதி, கூவாது இருந்த - கூவாமலிருந்த, குயில்பிள்ளாய் - குயிற்பிள்ளையே, வாவா - வருகவருக, ஓவாதே - நீங்காமல், பூமாம்பொழில் உடுத்த - பொலிவாகியமாஞ்சோலையையுடுத்த, பொன்மதில்சூழ் - பொன்மதில் சூழ்ந்த, காளத்திகோமான்வர - திருக்காளத்திவேந்தன்வர, ஒருகால்கூவு- ஒருதரம்கூவுவாய், எ - று

கோதுதல் - வகிர்தல். இதுகுயிற்பிள்ளையையிரத்தல். தலைமகள் கூற்று.

கயிலை.

81. கூவுதலும்பாற்கடலேசென்றவனைக்கூடுகவென்
றேவினான்பொற்கயிலையெம்பெருமான் - மேவியசீ
ரன்பாற்புலிக்காலன்பாலன்பாலாசையினாற்
றன்பாற்பால்வேண்டுதலுந்தான்.

இ - ள். பொன்கயிலை எம்பெருமான் - அழகிய திருக்கயிலாயத்தெம்பெருமான், மேவியசீர் அன்பால் - சிறப்பையுடைய அன்பினுல், புலிக்காலன்பாலன் - வியாக்கிரபாதனது புதல்வன், பால்ஆசையினுல் - பால்விருப்பத்தால், தன்பால் - தன்னிடத்தில், பால்வேண்டுதலும் - பாலைப்பிரார்த்தித்தளவில்; தான்கூவுதலும்-தான்கூவி யழைத்துப் பாற்கடல்வருதலும், (அதனைநோக்கி) பாற்கடலே - பாலாழியே, சென்று அவனைக்கூடுகென்று ஏவினுன் - நீ போய்அந்தப்பாலகனை யடையக் கடவாயென்றேவினுன்.

புலிக்காலன் - கௌதமன். பாலன்என்றது அவன்புதல்வனுகியஉபமந்யுபகவானை. "பாலகனுர்க்கன்று பாற்கடலீந்திட்ட கோலச் சடையற்கேயுந்தீபற" என்றுர் திருவாதவூரடிகளும்.

காளத்தி.

82. தானேயுலகாள்வான்றுன்கண்டவாவழக்க
மானுன்மற்றுரிதனையன்றென்பார் - வானோர்
களைகண்டானுய்கின்றகாளத்தியாள்வான்
வளைகொண்டான்மாறந்தான்வந்து.

இ - ள். தானேஉலகு ஆள்வான் - தானேஉலகங்களை யாள்பவன்' தான்கண்டஆறுவழக்கம் ஆனுல் -தான்கண்டவண்ணம் வழங்குதலையுடையனுயின்; மற்றுஆர் இதனை அன்றுஎன்பார் - வேறுயாவர் இதனை அல்லவென்று தடுக்கவல்லார், (என்னெனின்) வானோர்களை கண்தானுய்நின்ற - தேவர்களுக்கும் ஆதாரம்தானுகவே நின்ற, காளத்தி ஆள்வான் - திருக்காளத்தி யாள்வான், வந்துவளை கொண்டான் - வந்து எமதுவளையலைக் கவர்ந்துகொண்டு, மால்தந்தான்-ஆசையையெமக்குக் கொடுத்தேகினுன்எ - று.

உலகமுழுதும் தானே யாண்டருள்வோனுகிய இறைவனே யிவ்வாறு செய்தால் இச்செய்கைதகாதென்று மறுத்துரைக்க வல்லார் யாவரென்பதாம். இதுதலைமகள் வளையிழந்து இரங்கிக்கூறியது.

கயிலை.

83. வந்தோரரக்கனுர்வண்கயிலைமால்வரையைத்
தந்தோள்வலியினையேதாங்கருதி - யந்தோ
விடந்தாரிடந்திட்டிடார்கீழெலிபோற்
கிடந்தார்வலியெலாங்கெட்டு.

இ - ள். ஓர்அரக்கனுர் வந்து-ஒப்பற்றஅரக்கனுராகிய இராவணனுர் வந்து, தம்தோள்வலியினையே தாம்கருதி - தமதுபுஜபலத்தையே (பெரிதும்) தாம்மதித்து, வள்கயிலை மால்வரையை - வளவிய பெரியகயிலாயமலையை, இடந்தார் - தோண்டினுர், இடந்திட்டு - தோண்டி, இடார்கீழ்எலிபோல் - யந்திரத்தில் அகப்பட்ட எலியைப்போல, வலி எல்லாம்கெட்டு

கிடந்தார்-(தம்)வலிமுழுது மடங்கிக்கிடந்தார், அந்தோ-ஐயோ(இதென்ன பாவம்), எ - று.

இவ்வாறாயினமையால் இறைவரது வலிக்களவில்லை யென்றதாயிற்று.

காளத்தி.

**84.** கெட்டவரக்கரோவேதியரோகேளீர்கொல்
பட்டதுவுமோராதுபண்டொருநா - ளொட்டக்
கலந்தரனார்காளத்தியாள்வார்மேற்சென்று
சலந்தரனார்பட்டதுவுந்தாம்.

இ - ள். பட்டதுவும் ஓராது - தான்பட்டபாட்டையும் ஆராயாமல், பண்டு ஒருநாள் - முன்னொருகாலத்தில், ஒட்டகலந்து - நெருங்கக்கூடி, அரனார் — சிவபெருமானாகிய, காளத்தியாள்வார்மேல்சென்று - திருக்காளத்தியாள்வார்மீது (போர்செய்யப்)போய், சலந்தரனார்பட்டதுவும் - சலந்தரனார் பட்டபாட்டையும், கெட்ட அரக்கரோ-கெடுதியாகிய அரக்கர்களே, வேதியரோ - மறையோர்களே, கேளீர்கொல் - (நீங்கள்) கேட்டிலீர்களோ,

கயிலை.

**85.** தாம்பட்டதொன்றுமறியார்கொல்சார்வரோ
காம்புற்றசெந்நெற்கயிலைக்கோன் - பாம்புற்ற
வாரத்தார்பத்தர்க்கருகணையார்காலனார்
தூரத்தேபோவார்தொழுது.

இ - ள். காலனார் - கூற்றுவனார், காம்பு உற்றசெந்நெல் - மூங்கிலினின்றும் உதிர்ந்த மிக்கசெந்நெல் பரவியிருக்கிற, கயிலை - திருக்கயிலாயமலைக்கு, கோன் - தலைவர், பாம்பு - பாம்புகளை, உற்றஆரத்தார் - பொருந்திய ஆரமாகவுடையவர்,(அவரது) பத்தர்க்கு - அன்பர்க்கு, அருகு அணையார் - சமீபத்திற்சேராதவராகி, தொழுது - (அவரை) வணங்கி, தூரத்தே போவார் - தூரத்தேசெல்லுவார், சார்வரோ - அருகிற்சேர்வரோ, (சேரார் என்னெனின்) தாம்பட்டது-(முன்னே) தாம்பட்டபாட்டை, ஒன்றும்அறியார்கொல் - சிறிதும்அறிந்திலரோ, எ - று.

தாம்பட்டது - மார்க்கண்டன் பொருட்டுத்தாம் சிவபெருமான் திருவடியாலுதையுண்டு மூர்ச்சித்தது.

காளத்தி.

**86.** தொழுதுநமனுந்தன்றூதுவர்க்குச்சொல்லும்
வழுவில்சீர்க்காளத்திமன்னன் - பழுதிலாப்
பத்தர்களைக்கண்டாற்பணிந்தகலப்போமின்க
ளெத்தனையுஞ்செய்த்தாகவென்று.

இ - ள். வழுஇல்சீர் - குற்றமற்றசிறப்பினையுடைய, காளத்திமன்னன் - திருக்காளத்திவேந்தனது, பழுதுஇலா - குற்றமில்லாத, பத்தர்களைக்கண்டால் - அன்பரைக்காணின், பணிந்து - (அவர்களை) வணங்கி, எத்தனையும்சேய்த்துஆக - எவ்வளவு தூரமாகவாயினும், அகலப்போமின்கள் என்று - விலகிப்போங்களென்று, தொழுது - வணங்கி, நமனும் - கூற்றுவனும், தன் தூதுவர்க்குசொல்லும் - தன் தூதருக்குச் சொல்லுவான், எ-று.

கயிலை.

**87.** வென்றைந்துங்காமாதிவேரறுத்துமெல்லவே
யொன்றநினைதிரேலொன்றலாஞ் - சென்றங்கை
மானுடையானென்னையுடையான்வடகயிலை
தானுடையான்றன்னுடையதாள்.

இ - ள். ஐந்தும்வென்று - ஐம்பொறிகளையும் ஜெயித்து, காமாதிவேர்அறுத்து - காமம்முதலியவைகளை வேரறுத்து, மெல்லவே ஒன்றநினைதிரேல் - பையவே (உங்கள்மனம்) பொருந்தநினைவீராயின், அம்கைமான்உடையான் - அழகிய திருக்கரத்தில்மானையுடையவன், என்னைஉடையான்-என்னையும் (தனக்குஅடிமையாக) உடையவன், வடகயிலைதான்உடையான் - வடதிருக்கயிலாயத்தையு முடையவன், தன்னுடைய - அவனது, தாள் - திருவடியை, சென்றுஒன்றல் ஆம் - போய்ச்சேர்தல்கூடும், எ - று.

காமாதியாவன - காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மத்ஸரம் என்பன. இதனைவடநூலார் அரிஷட்வர்க்கம் என்பர்.

காளத்தி.

**88** தாளொன்றாற்பாதாளமூடுருவத்தண்விசும்பிற்
றாளொன்றாலண்டங்கடந்துருவித் - தோளொன்றா
றிக்கனைத்தும்போர்க்குந்திறற்காளிகாளத்தி
நக்கனைத்தான்கண்டநடம்.

இ - ள். தாள்ஒன்றால் - ஒருதிருவடியால், பாதாளம்ஊடுஉருவ-பாதாளத்தை யூடுருவிச்செல்லவும், தாள்ஒன்றால் - ஒருதிருவடியால், தண்விசும்பில் அண்டம்கடந்து உருவி - குளிர்ந்த ஆகாயத்திலுள்ள உலகங்களையெல்லாம்கடந்துருவி, தோள் ஒன்றால்-ஒருதோளினால், திக்குஅனைத்தும் போர்க்கும் - எல்லாத்திக்குகளையும் மூடுகின்ற, காளத்திநக்கனை - திருக்காளத்திச் சிவபெருமானை, திறல்காளி - வலியமைந்தகாளி யென்பவன், தான் கண்டநடம்-தான்கண்ட திரு நடநக்காட்சியிருந்தவாறென்னை, எ - று.

கயிலை.

89. நடமாடுஞ்சங்கரன்றாணான்முகனுங்காணான்
படமாடும்பாம்பணையான்காணான் - விடமேவுங்
காரேறுகண்டன்கயிலாயன்றன்னுருவை
யாரேயறிவாரிசைந்து.

இ - ள் நடம்ஆடும் - திருநிருத்தஞ்செய்கின்ற, சங்கரன் தாள் - சிவபெருமானது திருவடியை, நான்முகனும்காணான் - சதுர்முகனாகியபிரமனும்கண்டிலன், படம்ஆடும்பாம்பு அணையான்காணான் - படமெடுத்தாடுகின்ற சர்ப்பத்தைச் சயநமாகவுடையவனாகிய திருமாலும் கண்டிலன், (அங்ஙனமாக) விடம்மேவும் - நஞ்சக்கறைபொருந்திய, கார் ஏறுகண்டன் - நீலநிறமிகுந்ததிருமிடற்றினையுடையவனாகிய, கயிலாயன்தன் உருவை - திருக்கயிலாயநாதனது திருவுருவத்தை, இசைந்து அறிவார்யாரோ - பொருந்தியறிய வல்லார் யாவரோ, எ - று.

காளத்தி.

90. இசையுந்தன்கோலத்தையான்காணவேண்டி
வசையில்சீர்க்காளத்திமன்ன - னசைவின்றிக்
காட்டுமேற்காட்டிக்கலந்தென்னைத்தன்னோடுங்
கூட்டுமேற்கூடலேகூடு.

இ - ள். வசைஇல்சீர் - பழிப்பற்ற சிறப்பினையுடைய, காளத்திமன்னன் - திருக்காளத்திவேந்தன், இசையும் தன்கோலத்தை-பொருந்தியதன் திருக்கோலத்தை, யான்காணவேண்டி - நான்காணும்படி விரும்பி, அசைவுஇன்றி - சலநமற்றிருந்து, காட்டுமேல் - காட்டுவனாயின், காட்டி - காட்டி, என்னைக்கலந்து - என்னைச்சேர்ந்து, தன்னோடும்கூட்டுமேல் - தன்னோடும் கூட்டுமாயின், கூடலே - கூடற்சுழியே, கூடு - நீசேர், எ - று.

கூடல் - கூடற்சுழி. அதாவது தலைமகனைப்பிரிந்த தலைமகள் பிரிவாற்றாமையால் நெய்தனிலத்துக்கடற்கரையிற் சென்று, அங்குள்ள மணலின்மீது, தலைமகன்விரைந்து வந்தென்னைக் கூடுவதாயிருப்பின் இது தொடங்கின இடத்தேவந்து கூடக்கடவதென்று சங்கற்பித்துக் கொண்டு வளைவாகிய கோடுகிழித்தல்.

கயிலை.

91. கூடியிருந்துபிறர்செய்யுங்குற்றங்க
ணாடித்தங்குற்றங்கணாடாதே - வாடி
வடகயிலையேத்தாதேவாழ்ந்திடுவான்வேண்டி
லடகயிலலாரமுதைவிட்டு.

இ - ள். கூடிஇருந்து - (ஒருவரோடொருவர்) கலந்திருந்து, பிறர்செய்யும் குற்றங்கள்நாடி-பிறர்செய்யுங் குற்றங்களையாராய்ந்து, தம்குற்றங்கள்நாடாதே - தம் குற்றங்களையாராயாமலும், வாடி - (தவத்தால்) வாட்டமடைந்து, வடகயிலை ஏத்தாதே - வடதிருக்கயிலாயத்தைத் துதியாமலும்,

வாழ்ந்திடுவான்வேண்டில் - (ஒருவர்) இன்பவாழ்க்கை வாழவிரும்புவராயின், (அவ்விருப்பம்) ஆர் அமுதைவிட்டு - அரிய அமிர்தத்தைவிடுத்து, அடகு அயிலல் - இலைகளைத்தின்னுதற்கு நிகராகும், எ - று.

காளத்தி.

௯௨. விட்டாவிபோகவுடல்கிடந்துவெந்தீயிற்
பட்டாங்குவேமாறுபார்த்திருந்து - மொட்டாதாங்
கள்ளிருக்கும்பூஞ்சோலைக்காளத்தியுண்ணின்ற
வள்ளலைச்சென்றேத்தமனம்.

இ - ள். ஆவிவிட்டுபோக - உயிரானது விட்டுநீங்க, உடல் - (அவ்வுயிர்நீங்கின) உடம்பானது, கிடந்து-விழுந்து, வெந்தீயில் பட்டு-கொடிய தீயிலகப்பட்டு, ஆங்கு வேம் ஆறு-அவ்விடத்து வேகின்றவிதத்தை, பார்த்திருந்தும் -கண்டிருந்தும், கள் இருக்கும் - தேன்பொருந்திய, பூஞ்சோலை - மலர்ச்சோலைகள் நெருங்கிய, காளத்தி உள்நின்ற - திருக்காளத்தியில் நிலைபெற்றிருக்கிற, வள்ளலை - பரமோதாரனாகிய சிவபெருமானை,மனம் - என் மனமானது, சென்று ஏத்த ஓட்டாது - சென்றுதுதிக்கவொட்டாது, எ-று.

ஆம் - அசை. ஆங்கு என்றது மயானத்தை. எல்லாச்செல்வங்களினுஞ் சிறந்த முத்திச்செல்வத்தை வரையாது கொடுத்தருளுதலால் இறைவனை வள்ளல் என்றார்.

கயிலை.

௯௩. மனமுற்றுமையலாய்மாதரார்தங்கள்
கனமுற்றுங்காமத்தேவீழ்வர் - புனமுற்
றினக்குறவரேத்துமிருங்கயிலைமேயான்
றனக்குறவுசெய்கலார்தாழ்ந்து.

இ - ள். புனம் உற்று - தினைப்புனங்களையடைந்து, இனக்குறவர் - கூட்டமாகிய குறவர்கள், ஏத்தும் - துதிக்கின்ற, இருகயிலைமேயான் தனக்கு-பெரியதிருக்கயிலாயத்தைச் சேர்ந்திருப்பவனாகிய சிவபெருமானுக்கு, உறவுசெய்கலார் - அன்புசெய்யாதவர், தாழ்ந்து - இழிந்து, மனமுற்றும் மையலாய் - மனமுழுதும் மயக்கங்கொண்டவராய், மாதரார்தங்கள்-மாதர்களுடைய, கனம்முற்றும்-பெருத்த, காமத்தேவீழ்வர்-காமக்கடலில் விழுந்தழுந்துவர், எ- று.

புனமுற்ற இனக்குறவர் எனப்பிரித்து உற்ற என்னும் பெயரெச்சத்தகரம் தொகுத்தல் எனினுமாம். கனம்முற்றும் என்பதற்குத் தமதுமேன்மையழிதற்குக்காரணமாகிய என்றுரைத்தலுங் கூடும்.

காளத்தி.

94. தாழ்ந்தசடையுந்தவளத்திருநீறுஞ்
சூழ்ந்தபுலியதளுஞ்சூழரவுஞ் - சேர்ந்து
நெருக்கிவானோரிறைஞ்சுங்காளத்தியாள்வார்க்
கிருக்குமாகோலங்களேற்று

இ - ள். சேர்ந்து - கூடி, நெருக்கி - (ஒருவரையொருவர்)நெருக்கி, வானோர் - தேவர்கள், இறைஞ்சும்-வணங்குகின்ற, காளத்தி ஆள்வார்க்கு - திருக்காளத்தியாள்வாருக்கு, ஏற்றுஇருக்கும்மாகோலங்கள்-தக்கிருக்கின், பெரியதிருக்கோலங்கள், தாழ்ந்தசடையும - நீண்டசடையும், தவளத்திருநீறும் - வெண்மையாகிய திருநீறும், சூழ்ந்தபுலி அதளும் - (திருவரையிற்) சூழவுடுக்கப் பெற்ற புலித்தோலும், சூழ்அரவும் - (அத்திருவரையில்கச்சையாகச்) சுற்றிக்கட்டப்பட்ட பாம்புமேயாம், எ - று.

கயிலை.

95. ஏற்றின்மணியேயமையாதோவீர்ஞ்சடைமேல்
வீற்றிருந்தவெண்மதியும்வேண்டுமோ - வாற்றருவி
கன்மேற்பட்டார்க்குங்கயிலாயத்தெம்பெருமா
னென்மேற்படைவிடுப்பாற்கீங்கு.

இ - ள். ஆற்றருவி - அருவியாறுகள், கல்மேற்பட்டு - கல்லின்மீது தாக்கி, ஆர்க்கும் - ஒலிக்கின்ற, கயிலாயத்து, திருக்கயிலாய மலையில்எழுந்தருளியிருக்கிற, எம்பெருமான் - எம்பெருமானாகிய, என்மேற்படைவிடுப்பாற்கு-என்மீது படைவிடுக்கக்கருதினவனாகிய சிவபெருமானுக்கு, ஈங்கு - இவ்விடத்து, ஏற்றின் மணியே அமையாதோ - (தனது) இடபத்தின் கழுத்தீற்கட்டியமணியே போதாதோ, ஈர்சடைமேல் - குளிர்ந்தசடையின் மீது, இற்றிருந்தவெள் மதியும் வேண்டுமோ - வீற்றிருக்கிற வெள்ளியசந்திரனும் வேண்டுமோ, எ - று.

என்மேற்படை விடுக்கக்கருதிய சிவபெருமானது விடைமணியொன்றே என்னைக்கொலைசெய்யஅமையுமே, வெண்பிறையும்வேண்டுமோ என்பதாம். இது தலைமகள் தலைமகனதுபிரிவாற்றாது பிறைமுதலியவற்றான் வருந்திய ரங்கல்.

காளத்தி.

96. ஈங்கேவாவென்றருளியென்மனத்திலெப்பொழுது
நீங்காமனீவந்துநின்றாலுந் - தீங்கை
யடுகின்றகாளத்தியாள்வாய்நாணல்ல
பணிகின்றவண்ணம்பணி.

இ - ள். தீங்கை அடுகின்ற - தீமைகளைச் சிதைக்கின்ற, காளத்தி - திருக்காளத்தியை, ஆள்வாய் - ஆள்பவனே, ஈங்கேவாஎன்று அருளி -

(என்னை )இங்குவாவென்று திருவாய்மலர்ந்தருளி, என்மனத்தில்-என்மனத்தின்கண்ணே, எப்பொழுதும் - எக்காலமும், நீங்காமல் -பிரியாமல், நீவந்து நின்றாலும் - நீவந்துநிலைபெற்றிருப்பினும், பணிகின்ற வண்ணம் - (உன்னை நான்) வணங்கும் வண்ணம், நல்லநாள் பணி - நல்ல நாளைக்கட்டளையிட்டருள வேண்டும், எ - று.

நாணல்லபணிகின்ற வண்ணம் என்பதற்கு நாள்தோறும் நன்மையாகிய (உன்னைப்) பணியும் விதத்தை என்றுரைப்பினுமமையும்.

கயிலை.

97. பணியாதுமுன்னிவனைப்பாவியேன்வாளா
கணியாதுகாலங்கழித்தே - னணியுங்
கருமாமிடற்றெங்கயிலாயத்தெங்கள்
பெருமானதில்லைபிழை.

இ - ள். பாவியேன் - பாவியாகிய நான், முன் இவனைப்பணியாது - முன்னேயிவனை வணங்காமலும், கணியாது - மதியாமலும், வாளா - வீணாகவே, காலம் கழித்தேன் - (என்) வாழ்நாட்களைப்போக்கினேன், அணியும் - அலங்கரிக்கப்பெற்ற, கருமாமிடற்று - கரியதிருக்கண்டத்தையுடைய, எம் கயிலாயத்து - எமதுதிருக்கயிலாயத்திலுள்ள, எங்கள் பெருமானது பிழை இல்லை - எங்கள்பெருமானது தவறு இல்லை, எ - று.

அணியுங்கருமாமிடற்றுப் பெருமான் எனவும், எங்கயிலாயத்தெங்கள்-பெருமான் எனவும் இயைக்க. இறைவனைப் பணியாதுங் கணியாதுங் காலங்கழித்தேனாதலால் பாவியேனது பிழையேயன்றி இறைவன் பிழையில்லை யென்பதாம்.

காளத்தி.

98. பிழைப்புவாய்ப்பொன்றறியேன்பித்தேறினார்போ
லழைப்பதேகண்டாயடியே - னழைத்தாலு
மென்னாதரவேகொண்டின்பொழில்சூழ்காளத்தி
மன்னாதருவாய்வரம்.

இ - ள். பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியேன் - உஜ்ஜீவிக்குமார்க்கமும் பேற்றினது தன்மையும் ஆகிய இவற்றுள்ஒன்றனையும் அறிந்திலேன், பித்து ஏறினார்போல் - பித்தேறினவர்போல, அடியேன் அழைப்பதே - அடியேன் அழைத்த லொன்றையுமேயுடையேன், அழைத்தாலும் - (அன்புசெய்தல் முதலியவையில்லாமல்) சும்மாஅழைத்தாலும்; இன்பொழில் சூழ்காளத்திமன்னா - இனிதாகிய சோலைசூழ்ந்ததிருக்காளத்தி வேந்தனே, என்ஆதரவேகொண்டு - என்விருப்பத்தையே ஏதுவாகக்கொண்டு, வரம் தருவாய் - வரம்தந்தருளக்கடவாய், எ - று.

உய்வகையும் உறும் பேறும் அறியேன், ஆயினும் சும்மா அழைத்தலே தொழிலாகக்கொண்டிருக்கிறேன் ஆதலால் என்விருப்பத்தையே ஏதுவாகக்கொண்டு அநுக்ரஹிக்கவேண்டும் என்பதாம்.

கயிலை.

99. வரமாவதெல்லாம்வடகயிலைமன்னும்
பரமாவுன்பாதாரவிந்தஞ் - சிரமார
வேத்திடும்போதாகவந்தென் மனத்திலெப்பொழுதும்
வைத்திடுநீவேண்டேன்யான் மற்று.

இ - ள். வடகயிலைமன்னும் பரமா - வடதிருக்கயிலையில் நிலைபெற்றமேலோனே, வரம்ஆவதுஎல்லாம் - (எனக்குநீதந்தருளும்) வரமாவதெல்லாம், உன்பாதஅரவிந்தம்-உன் திருவடித்தாமரைமலர், சிரம்ஆர - என்சிரத்திற் பொருந்தவும் - ஏத்திடும்போது ஆக - (அதனைத்) துதிக்குங்காலம் எனக்குண்டாகவும், வந்து-நீயெழுந்தருளி, என்மனத்தில் -என்உள்ளத்தில், எப்பொழுதும் - எக்காலத்தும், நீவைத்திடு - நீவைத்திடவேண்டும், யான்மற்றுவேண்டேன் - (அப்படிசெய்வையாயின்) நான்வேறொன்றனையும் விரும்பேன், எ - று.

காளத்தி.

100. மற்றும்பலபிதற்றவேண்டாமடநெஞ்சே
கற்றைச்சடையண்ணல்காளத்தி - நெற்றிக்கண்
ணாராவமுதின்றிருநாமமஞ்செழுத்துஞ்
சோராமலெப்பொழுதுஞ்சொல்.

இ - ள் மடநெஞ்சே - அறியாமையை யுடையமனமே, மற்றும்பல பிதற்றவேண்டாம் - வேறும் பலவற்றைப் பிதற்றுதல்வேண்டாம், கற்றைச்சடை அண்ணல் - திரட்சியாகிய சடாபாரத்தையுடைய பெரியோனாகிய, காளத்தி நெற்றிக்கண் ஆரா அமுதின் - திருக்காளத்தியிலுள்ள நெற்றிக்கண்ணையுடைய தெவிட்டாத அமிர்தம்போன்ற சிவபெருமானது, திருநாமம்அஞ்சுஎழுத்தும்-திருநாமமாகிய ஐந்தெழுத்தையும், எப்பொழுதும் - எக்காலத்தும், சோராமல்சொல்-மறவாமல் உச்சரிப்பாய், எ - று.

மனமே, பலவற்றைப்பிதற்ற லொழிந்து, திருக்காளத்தி ஆராவமுதினது திருநாமமாகிய ஸ்ரீபஞ்சாக்கரத்தைச் சோர்விலாதுச் சரித்துய்யக்கடவையென்பதாம்.

கயிலைபாதி காளத்திபாதி திருவந்தாதி
மூலமும் உரையும்.
முற்றிற்று.